

# திறவுகோல்

பங்குனி 2049 / மாத இதழ்

காவிரி இறுதித் தீர்ப்பா?
தமிழர்களுக்கு இறுதிச் சடங்கா?

---

இந்த மண்ணில் பெண்கள்

---

அட்டப்பாடி மதுவும்
நம்மாழ்வார் ஏரியும்

---

என் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும்

---

செண்பக வனம்


வெளியீடு

**மன்னையின் மைந்தர்கள் குழு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# இந்த மண்ணில் பெண்கள்

ஆயிரம் வார்த்தைகளுக்குள்
அகப்பட்டுக் கொண்ட - என்
கவிதைக்கான வரிகளை
எங்கே தேடுவேன் ...

வென்றவர் ஓராயிரம் பேர் ...
தோற்றவர் பல்லாயிரம் பேர்...
அவர்கள் பேசுகிறார்கள் - என்
கவிதையின் ஊடே ...

காலங்காலமாக அடிமைப்பட்டோம் ...
காடு சுற்றி வேட்டையாடினோம் ...
கழனியமைத்து வேளாண்மை செய்தோம் ...
வியூகமமைத்து வீடு கட்டினோம் ...
வரலாறு இன்னமும் பேசிக் கொண்டேதான்
இருக்கிறது தாய்வழிச் சமூகத்தின் சிறப்பை ...
பின் ஏன்?

காலங்காலமாய் அடிமைப்பட்டோம்
நாங்கள் பெண்ணாதிக்கம் செய்யவில்லை ...
காலன் எங்களுக்குத் தொல்லை செய்யவில்லை ...
காதலன் எங்களை அடிமைப்படுத்தினான்-ஆம்

அன்புகாட்டி அடிமைப்படுத்தினான் ...
முதலில் ஆடுகளை இழந்தோம் பிறகு
அதிகாரத்தை இழந்தோம் ...

எல்லாம் இழந்த நாங்கள் இன்று
அன்பு காட்டும் அடிமைகளாகவே மாற்றப்பட்டோம்...
வாழ்க்கையில் போராட்டங்கள் இருக்கலாம் எங்களுக்கு
போராட்டமே வாழ்க்கையாக மாறியிருக்கிறது ...

கருக்கொலையில் தப்பித்தோம் ...
கள்ளிப்பாலில் தப்பித்தோம் ...
பால்ய மணத்தில் தப்பித்தோம் ...



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747
vasiva1711gmail.com

மார்ச் 8 உலக மகளிர் தின
சிறப்புக்கவிதை

கட்டளையோடு கல்வி கற்றோம் ...
அழகெனில் ஆராதிக்கப்பட்டோம் ...
அறிவெனில் மழுங்கடிக்கப்பட்டோம் ...
எல்லாவற்றிற்கும் போராடினோம் ...
இருபத்தோராம் நூற்றாண்டில் நுழைந்தோம் ...
கௌரவம் கிடைக்குமென எண்ணியிருந்தோம் ...

குடும்பத்தின் கௌரவம் நீ எனக் கட்டளையிட்டார்கள்
பாலின சமத்துவம் பேசினார்கள் ...
பலவீனத்தின் குறியீடாகவே பார்த்தார்கள்
ஊரையே கூட்டி உடல் சார்ந்த சடங்குகளை
எங்களைக் கொண்டே
அரங்கேற்றினார்கள் ...

காதல் செய்தோம் அது எங்களுக்கு
விரிக்கப்பட்ட வலையாய் இருந்தது. . .
காதல் வேண்டாமென்றோம்
முகத்திரையற்ற எங்கள்
முகத்தில் ஆசிட்டை வீசியெறிந்தார்கள் ... .
வலியும் தீரவில்லை...
வடுவும் மாறவில்லை ...

எழுந்தோம் ...
இலக்கை நோக்கிப் பயணித்தோம் ...
இடையில் தடுக்கப்பட்டோம் ... .
பெண் பார்க்க என்றனர் இது
எங்களுக்கு இன்னொரு வதை ...
வந்தவர் சினிமா முகங்களை
எங்களுள் தேடினார் ...

ஆடச் சொன்னார் ...
பாடச் சொன்னார் ...
நிகழ்த்துக்கலையே நிகழ்த்திக் காட்டினோம் ...
ஒருவழியாக விலைபேச ஆரம்பித்தார்கள் ஆம்
கொடுப்பதும் ... பெறுவதும் ... எடுப்பதும் எனும்
சொல்லாடல்கள் நவீன திருமணச் சந்தையில்
வரதட்சணையின் மாறாத பழைய குறியீடுகள் ...



ஆசிரியை நிர்மலா லூர்து மேரி
பூவனூர்

வித்தியாசமான சந்தை இது பொருளை
விற்பவனே முன்வந்து பொன்னையும் தருகிறான் ...
மகளுக்குத் திருமதி எனும் பட்டம் பெறவே ...
வேட்பாளராய் நிறுத்தப்பட்டோம் ...
வெற்றியும் பெற்றோம் ...

அதிகாரம் அவனுடையதாக இருந்தது ...
தனித்து நிற்கலாமெனில்
வீதி அவனுடையதாக இருந்தது
வீடு என்னுடையதாக ஒதுக்கப்பட்டிருந்தது ...
மரியாதைக்குரிய அன்பு காட்டும்
அடிமைகளாகவே மாறிப்போனோம் ...

இந்த மண்ணில் நிலம் நீரெல்லாம்
பெண் பெயராய், நாங்கள்
இருப்பதோ மண் புழுவாய் ...

பெண் அடிமைக்கு விடை கொடுப்போம் ...
பெண் விடுதலைக்குக் குரல் கொடுப்போம் ...
பெண் உயர்வுக்குக் கைகொடுப்போம் ...

பெண்மையை இந்த மண்ணின்
விருட்சமாக்குவோம் ...

---

முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

# காவிரி இறுதித் தீர்ப்பா? தமிழர்களுக்கு இறுதிச் சடங்கா?



இராசசேகரன் மன்னை

காவிரிச் சிக்கல் நீண்ட நெடுங்காலமாக தமிழர்களையும் தமிழர் நிலத்தையும் வறட்சிக்கு ஆட்படுத்தி அழித்துக்கொண்டிருக்கிறது. நடந்தால் வாழி காவிரி என்று பாடிய தமிழர்கள் முடங்கினால் காவிரி என்று பாட வேண்டிய நிலையில் வஞ்சிக்கப்படுகிறோம். புறநானூறு தொடங்கி பாரதிதாசன் கடந்து இன்றைய இளையத்தலைமுறை வரை காவிரியில் தமிழர்களின் உரிமையையும் அதன் மேன்மையையும் அவசியத்தையும் பாடி வருகின்றனர்.

எத்தனை வரலாறுகள் இருந்தும் எத்தனை உரிமைகள் இருந்தும் 1807ல் தொடங்கி இன்று வரை தமிழர்கள் காவிரி உரிமையில் வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கிறோம். இதில் எந்த இடத்திலும் அன்றைய மைசூர் சமஸ்தானமும் சரி, இன்றைய கர்நாடக அரசும் சரி, தன்னை கன்னடனாக பாவித்து தமிழர் விரோதப்போக்கையே கடைப்பிடிக்கிறது. அதனாலேயே அனைத்து உத்தரவுகளையும் குப்பையில் வீசி எறிகிறது. இதனால் தமிழர்களின் விவசாயம் அழிந்துவிட்டது குடிநீர் தட்டுபாடு ஏற்பட்டு நிலங்களும் வரண்டு மழையும் பொய்த்து போகிவிட்டது. வான் பொய்யா தான் பொய்யும் காவிரி என்ற சொல்லாடல் பொய்யாகி தான் பொய்யாததால் வானும் பொய்யாமல் வறண்டு, நிலங்கள் வெடித்து கிடக்கிறது.

காவிரி இதன் பொருள் விளக்கமே அதன் நிலப்பரப்பின் உயிர்த்தன்மையை உலகிற்கு எடுத்து கூறும். கா - சோலை என்று பொருள்படும். விரி - விரிவுப்படுத்துதல் என்று பொருள்படும். அதாவது சோலைகளை விரிவுப்படுத்துதல் என்ற பொருளில் காவிரி என்று அழைக்கப்படுகிறது அதனாலேயே உலகிலேயே மிகப்பெரிய சமவெளி பகுதியான காவிரிப்படுகையை தனது மடியில் கொண்டு சீராட்டி பல காலமாக பாதுகாத்து வளர்த்து வந்துள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து விவசாயமும் செழித்து இருந்ததால் தான் அவர்களின் கழிவுகள் இன்று உலகிலேயே சுத்தமான நிலக்கரி உள்ளிட்ட கனிம வளங்களை காவிரிப்படுகை புதைத்து வைத்துள்ளது. இதுவே காவிரிக்கும் தமிழருக்கும் உள்ள தொடர்பையும் தமிழரின் இயற்கை சார்ந்த வாழ்வியலின் தொன்மையையும் உலகிற்கு எடுத்து கூறும்.

காவிரியின் தோற்றுவாய் கர்நாடகத்தில் இருப்பதால் உரிமை கொண்டாடினாலும் அதன் அதிக பாசனம் தமிழர் நிலப்பரப்பிலேயே உள்ளது. கார்நாடகத்தின் இந்த நடவடிக்கை காவிரியை சிறைப்பிடித்து அபகரித்து கொள்வதையே குறிக்கிறது. அபகரித்து கொள்ளும் வஞ்சக நோக்கத்தோடே காவிரியின் குறுக்கே பல அணைகளை கட்டி நீரை

தேக்கிக்கொண்டு செயற்கையான தண்ணீர் தட்டுப்பாட்டை கணக்கில் காட்டி தமிழக நீர் உரிமையை மறுக்கிறது.

1807 ல் தொடங்கிய காவிரி சிக்கல், 1866 ன் ஒப்பந்தப் படி, கர்நாடகம் எக்காரணத்தைக் கொண்டும் பாசனப்பகுதிகளை அதிகரிக்க கூடாது. தமிழக ஒப்புதலின்றி அணைகள் கட்டக்கூடாது என்று தெளிவாக கூறுகிறது. அதன் பின்னர் 1924 ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கர்நாடகத்தில் கண்ணம்பாடி அணை கட்டிக்கொள்ளவும் தமிழகத்தில் மேட்டூர் அணை கட்டிக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது. அதிலும் 11 ஆ மி.க அளவில் கண்ணம்பாடி அணை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அன்றைய அரசியல் சூழலைப் பயன்படுத்தி கர்நாடகம் தான் திட்டமிட்டபடி 44 ஆ மி.க அளவில் அணையைக் கட்டி அதற்கு கண்ணம்பாடி என்ற பெயருக்கு பதிலாக கிருட்ணசாகர் அணை என்று பெயரிட்டது.

இதில் சட்டப்படி நடவடிக்கை என்றால் கூட கண்ணம்பாடி அணை தான் 11 ஆ மி.க கட்ட உத்தரவு உள்ளது. கிருட்ணசாகர் அணையை பற்றி என்றால் தனி விசாரணை அமைக்க வேண்டும். அதில் காலம் தாழ்த்திச் சூழலைச் சரி செய்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் கணக்கு. ஆனால் அந்தச் சிக்கலைக் கூட தமிழகத்தில் இருந்து அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. மேலும் கர்நாடகம் எக்காரணத்தைக் கொண்டும் விவசாய நிலங்களை அதிகரிக்க கூடாது என்று ஒப்பந்தம் சொல்கிறது. அதையும் மீறியது கர்நாடகம். மேலும் இந்த ஒப்பந்தம் ஐம்பது ஆண்டுகள் நீடிக்கும், அதற்கு மேல் அன்றைய சூழலுக்கு ஏற்றாற்போல ஒப்பந்தத்தை புதுப்பித்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் 1974 ல் அன்றைய தமிழக அரசு இதனை செய்யவில்லை என்பதை காரணம் காட்டி இலாவகமாக புதுப்பித்தல் என்ற வார்த்தையை மறைத்து 1924 ஒப்பந்தமே காலவதியாகிவிட்டது என்று கூறிவிட்டது.

அதேபோல் 1974 ல் தமிழகத்தின் அரசியல் நிலையையும் இந்திய ஒன்றியம் அதன் மீது தொடுத்த நெருக்கடிகளையும் பயன்படுத்திக் கொண்டு 1978ம் ஆண்டிற்குள் கபினி, ஹேமாவதி, ஏரங்கி என்று பல தடுப்பணைகளை கட்டி தண்ணீரைத் தேக்கி தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியாத சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டது. இதனை இங்கிருக்கும் கட்சிகளும் திருடனுக்கு தேள் கொட்டியதை போன்று அமைதி காத்துக்கொண்டு கன்னடர்கள் வெகுண்டெழுவதற்கு நேர்மாறாக தமிழர்களை கட்சிகளாகவும் இயக்கங்களாகவும் பிரித்து மழுங்கடித்து வைத்திருந்தனர். இதெல்லாம் கர்நாடகத்திற்கு சாதகமாகவே இருந்தது. இதன் மூலம் இந்திய ஒன்றியம் கர்நாடகத்திற்கு ஆதரவாகவே இருந்துள்ளது என்பது மட்டுமன்றி தமிழக கட்சிகளும் அதற்கு மறைமுகமாக உதவி செய்துள்ளதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

1984 வரை மேட்டூர் அணைக்கு சராசரியாக 361 ஆ.மி.க நீர் வந்துள்ளது இதனை 1984 லில் தமிழக பொதுப்பணித் துறை வெளியிட்ட மேட்டூர் அணையின் பொன்விழா

ஆண்டு மலர் உறுதி செய்கிறது. இந்த நீரையும் 1991 ல் வழங்கப்பட்ட இடைக்கால தீர்ப்பு 205 ஆ.மி.க வழங்க வேண்டும் என்று குறைத்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

205 ஆ.மி.க வழங்க வேண்டும் என்ற இடைக்கால தீர்ப்பை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் 2007 லில் இறுதி தீர்ப்பாக 192 ஆ.மி.க என்று குறைக்கப்படுகிறது.

192 ஆ.மி.க வழங்க வேண்டும் என்ற தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடக்கப்பட்ட வழக்கிலும் தற்போது 177.25 ஆ.மி.க என்ற குறைத்தே தமிழகத்திற்கு நீதி வழங்கப்பட்டள்ளது. இதனை சனநாயக ரீதியில் நீதி என்று கூறினாலும் இது தமிழர்களின் மீது தொடுக்கப்பட்ட மாபெரும் அநீதியே.

1924 லில் தொடங்கி 2018 வரையிலும் எங்கேயுமே கர்நாடகமும், இந்திய ஒன்றியமும் தமிழர்களிடத்தில் நியமாக நடந்துக்கொள்ளவில்லை அதேநேரத்தில் தமிழகமும் உரிமையை மீட்கும் அளவிற்கு முனைப்புக் காட்டவில்லை என்பதே உண்மை. காலங்காலமாக கலவரங்களை ஏற்படுத்தியும், கர்நாடகத்தில் வாழும் தமிழர்களை அச்சுறுத்தியும் கன்னடம் இந்திய ஒன்றியத்தையும், நீதித்துறையையும் அச்சுறுத்தி பணிய வைத்துள்ளது. மேலும் கர்நாடகத்தில் இருந்து தமிழர்களை வெளியேற்றுவது, தமிழர்களின் வணிக நிறுவனங்களை சூறையாடுவது, தமிழர்களின் வாகனங்களை எரிப்பது என்று அராஜகத்தின் வழியிலேயே தமிழர்களின் காவிரி உரிமைகளை கன்னடம் பறித்துள்ளது. இதற்கு இந்திய ஒன்றிய ஆரிய இனப்பகையும் மறைமுக ஆதரவளித்துள்ளது. மேலும் தமிழக அரசுகள் சார்பில் இக்கொடுமைகளை தடுப்பதற்கு இராசாங்க ரீதியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதாகவே தெரிகிறது.

அதிலும் திரு.தீபக் மிஸ்ரா தலைமையிலான உச்ச நீதிமன்ற இறுதி தீர்ப்பானது அப்பட்டமாக கர்நாடகத்தின் அச்சுறுத்தலுக்கு பயந்து எழுதப்பட்டது என்பதை சந்தேகிக்க வைக்கிறது. அதாவது 192 ஆ.மி.க தண்ணீர் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டும் என்ற இந்த தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட இவ்வழக்கில் பெங்களூர் குடிநீர் தேவையைக் கணக்கில் காட்டி 14.75 ஆ.மி.க நீரை குறைத்து 177.25 ஆ.மி.க கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடுகின்றனர். அதாவது காவிரி நதிநீர் பங்கீட்டு அளவிலான வழக்கு வாதத்தின் அடிப்படையில் தீர்ப்பின் போது நிலத்தடி நீர் பங்கீட்டையும் கணக்கிலெடுக்கிறது. இது அப்பட்டமான உரிமை மீறல் நடவடிக்கை ஆகும். இதிலும் தமிழக வழக்கறிஞர் கூறிய சென்னை குடிநீர் தேவை மற்றும் தற்போதைய நிலத்தடி நீர் அளவு எதையும் இவர்கள் கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை.

இவர்களின் இந்த முடிவுக்கும் துறைசார் தளர்வு கொடுப்பது எதுவென்று பார்த்தால் தமிழகத்தில் நடைப்பெற்ற எந்த விவசாயிகளின் மரணத்தையும் இந்த அரசுகள் வறட்சியால் நடந்ததாக பதிவு செய்யவில்லை. அதேபோன்று வறட்சியால் ஏற்பட்ட உற்பத்தி குறைவிற்கும் காப்பீட்டின் மூலம் நிவாரணத்தொகை வழங்கப்படுகிறதே

தவிர வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக தமிழக அரசு எதையும் இதுவரையிலும் அறிவித்ததில்லை. அப்படி ஏதாவது ஆவணங்கள் இருந்திருந்தால் இவ்வாதத்திற்கு கூடுதல் பலம் கிடைத்திருக்கும். சட்டத்தை பொறுத்தவரையில் காகிதங்களும் ஆவணங்களும் தான் பேசுமே தவிர, வழக்கறிஞர்கள் வாதம் இரண்டாம் பட்சமே இது தமிழக விவசாயிகளுக்கும் தெரிவதில்லை அரசிற்கும் அக்கறை இல்லை.

அடுத்து தமிழகத்தின் நிலத்தடி நீரை கணக்கின் அடிப்படையில் எடுத்துக்கொண்டால் கர்நாடகத்தின் நிலத்தடி நீரையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற வாதம் இயல்பாகவே வருகிறது. ஆனால் கர்நாடகம் நிலத்தடி நீர் குறித்த கணக்கு எங்களிடம் இல்லை என்று கூறிய வாதத்தை அப்படியே நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. நியாயமான நீதி என்றால் முதலில் கணக்கை கொடுங்கள் அதன் பிறகு தமிழக நிலத்தடி நீர் அளவோடு ஒப்பிட்டு தீர்ப்புக் கூறுகிறோம் அல்லது இந்த வாதமே தேவையில்லாதது என்று தானே கூறியிருக்க வேண்டும் அதுவும் இல்லை. ஏனோதானோ என்று முடிவெடுக்க காவிரி ஒன்றும் சாக்கடை தண்ணீர் இல்லையே, தமிழர்களின் உயிராதாரம். காவிரிநீர் 12 மாவட்ட விவசாயத்தின் பாசன ஆதாரம். 20 மாவட்டங்களின் குடிநீர் ஆதாரம்.

தமிழர் நிலத்தின் மொத்த நீர் தேவையில் 75% காவிரியை நம்பியே உள்ளது. அந்த தேவை தற்போது ஆழ்துளை கிணறுகள் மூலம் நிலத்தடி நீரில் இருந்து எடுக்கப்படுகிறது. அதனாலேயே இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பத்தடியில் இருந்த நிலத்தடி நீர்மட்டம் தற்போது 300 அடியில் இருக்கிறது. விவசாய நிலங்களில் அதைவிட மோசமாக உள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக சேமித்து வைத்திருந்த நிலத்தடி நீரை இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இவ்வளவு இழந்திருக்கிறோம். இன்று நிலத்தடி நீரில் உப்பு நீர் உட்புகுந்து சிறுநீரக கோளாறுகள் அதிகரிக்கிறது இதை உறுதி செய்யவே ஊரெங்கும் சிறுநீரக மருத்துவமனைகள் புற்றீசலாக தோன்றுகின்றன. நாமும் இந்த சூழ்ச்சியை உணராமல் அறிவியல் வளர்ச்சி என்று பெருமை பேசித்திரிகிறோம். இன்னும் சில ஆண்டுகள் கடந்தால் ஆழ்துளை கிணறுகளின் வழியாக இயற்கை எரிவாயு (மீத்தேன்) எடுத்துவிடலாம் போல.

இந்த தீர்ப்பிலும் சூசகமாக ஒரு வார்த்தை இணைக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பு பதினைந்து ஆண்டுகளுக்கு மாற்றப்படாது. இதற்கு மேல்முறையீடும் கிடையாது அப்படியே மேல்முறையீடு செய்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும் இதைத்தான் சட்டம் சொல்கிறதா? இது தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்படுகிற மறைமுக சர்வாதிகாரம். இந்த சூழ்ச்சி தமிழகத்தின் எந்த தலைவர்களுக்கும் தெரியவில்லை அல்லது தெரியாதவர்களை தான் நாம் தலைமைகளாக கொண்டுள்ளோம். இத்தனை காலம் கர்நாடகத்தால் தொடர்ந்து சாதகமாக தீர்ப்பை பெறுவதற்கு காரணம் கன்னடர்களின் இனவெறி, அதனை பயன்படுத்தி அச்சுறுத்தி கலவரங்களை செய்து தீர்ப்பை பெறுகிறார்கள்.

இந்த வெறித்தனத்திற்கு கன்னட அரசுகளும் ஏனைய கட்சிகளும் மறைமுகமாக ஆதரவு தருகிறது. ஆனால் தமிழர் நிலத்தில் இனவுணர்வு கூட இல்லாத அளவிற்கு மக்களும் விவசாயிகளும் மழுங்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் மீறி மக்கள் வெளியே வந்தால் அரசு வரிசையாக வழக்குகளை பதிவு செய்து ஒடுக்கிவிடுகிறது இதுவும் ஒருவகையில் எதிரியின் பலத்தை கூட்டுகின்ற செயலே. தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்குமான போராட்ட வீரியத்தின் இடைவெளி இந்தளவிற்கு நேரெதிராக இருந்தால் எங்கிருந்து நியாயமான தீர்ப்பு கிடைக்கும்? சாதகமான தீர்ப்பு தான் கிடைக்கும் அதுவும் அச்சுறுத்துபவர்களுக்கு சாதகமாக தான் தீர்ப்பு வரும்.

அதிலும் இறுதி தீர்ப்பில் சற்று ஏறக்குறைய 15 ஆ.மி.க குறைக்கப்பட்டுள்ளது. ஒரு ஆ.மி.க என்பது 6000 ஏக்கர் விவசாய நிலத்திற்குரிய பாசன நீர். இடைக்கால தீர்ப்பு முதல் இறுதி தீர்ப்பு வரையிலும் சராசரியாக 30 ஆ.மி.க குறைக்கப்பட்டுள்ளது. அப்படி பார்த்தால் 30 X 6000 = 1,80,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கான பாசனம் பறிக்கப்பட்டுள்ளது. மேலும் 1984லில் மேட்டூர் அணை பொன்விழா மலரில் வெளிட்டுள்ள அளவின் படி 361 ஆ.மி.க தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு 192 ஆ.மி.க அதன்படி பார்த்தால் 361- 192 = 169 ஆ.மி.க உரிமையை 35 ஆண்டுகளில் இழந்துள்ளோம். 169 X 6000 = 10,14,000 ஏக்கர் பாசனத்தை இழந்துள்ளோம்.

இந்த விவசாய பாதிப்பு கண்கூடாக நமக்கு தெரிகிற உண்மைதான். இதைத்தான் அரசுகளும் அரசியல்வாதிகளும் நிலத்தை விவசாயிகள் விற்கிறார்கள் இதனால் விவசாயம் குறைகிறது என்று கூறுகிறார்கள். அதாவது காவிரியில் நீரின்றி பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலங்கள் வறண்டு விவசாயம் செய்ய முடியாமல் வேறுவழியின்றி இயலாமையில் விவசாயிகள் விற்பதை காரணம் காட்டி இந்த இடத்தில் நியாயமாக வரவேண்டிய கோவத்தினை மழுங்கடிக்கிறார்கள். இதிலும் இந்த கணக்கின்படி சரியாக நீர் வந்தில்லை என்பது அது தனி கதை.

ஆனால் தமிழரினத்தின் இவ்வளவு பாசனப்பகுதிகளை நாம் இழந்த போதிலும் நமது தற்சார்பு பொருளாதாரத்தை அழித்தப்போதிலும் இன்றும் கன்னடர்களின் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க கர்நாடக பொன்னியை தான் அதிகளவில் உணவாக எடுத்துக்கொள்கிறோம். இதன் மூலம் அவர்கள் பொருளாதாரம் வளர்கிறது, எதிரியின் பலமும் பலமடங்கு அதிகரிக்கிறது. அந்த வலிமையை கொண்டு மூர்க்கமாக நம்மை தாக்குகிறார்கள். இவ்வளவு அழித்தப்பிறகும் இன்னும் அவர்கள் வெறி குறையவில்லை.

இந்த 177.25 ஆ.மி.க அளவு கூட நீரின்றி அழிந்து போகாமல் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே அதற்கான அளவு தான். அதையும் உரிய முறையில் தீர்ப்பின் படி கொடுப்பதற்கு இந்திய ஒன்றிய அரசிற்கு மனமில்லை. இதற்கு இந்திய ஒன்றியம் கூறுகின்ற காரணம் ஒரு குழு (sekume) அமைத்து நீரை கொடுக்க சொல்லி தான் தீர்ப்பு உள்ளதே தவிர காவிரி மேலாண்மை வாரியமோ, காவிரி நதிநீர் பங்கீட்டு

குழுவோ அமைக்க வேண்டும் என்று கூறவில்லை என்று மத்திய நீர்வளத்துறை செயலர் அப்பட்டமாக ஊடங்களில் பொய் உரைக்கிறார். ஆனால் தீர்ப்பு தெளிவாக கூறுகிறது. காவிரி நடுவர் மன்றம் கூறிய இந்திய ஒன்றியம் அரசிதழில் வெளியிட்டதன் படி காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நதிநீர் பங்கீட்டு குழு அனைத்தையும் ஆறு வாரத்தில் அமைக்க வேண்டும். இதில் வழங்க வேண்டிய நீரின் அளவான 177.25 ஆ.மி.க வை தவிர மற்ற எதிலும் மாற்றமில்லை என்று கூறுகிறது. அப்படியானால் இந்த sekume என்ற வார்த்தை ஏன் வருகிறது என்று தோன்றலாம். அது 1956ல் மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் சிக்கல் தொடர்பான சட்டப் பிரச்சனையைத் தீர்த்து கொள்ள ஒரு குழு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. அந்த சட்டத்தின் படி தான் காவிரி நடுவர் மன்றமானது காவிரி நீரை தமிழகம், கேரளம், பாண்டிசேரி மற்றும் கர்நாடகம் பிரித்து கொள்ள காவிரி மேலாண்மை வாரியமும் காவிரி நதிநீர் பங்கீட்டு குழுவையும் இந்திய அரசு அமைக்க வேண்டும் என்று கூறுகிறது. இதை குறிப்பிட சட்டப்படி ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பில் sekume என்ற வார்த்தை வருகிறது. இதையே காரணம் காட்டி மீண்டும் இந்திய ஒன்றியம் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நதிநீர் பங்கீட்டு குழு அமைக்க மறுக்கிறது என்றால் இதனை மாற்றாந்தாய் மனப்பான்மை என்று கூறாமல் வேறெப்படி கூறமுடியும்.

ஏன் தமிழர்களுக்கு காவிரி கொடுக்க இவ்வளவு வஞ்சகம் செய்யவேண்டும் என்ற கேள்வியும் இதனுடாக எழுகிறது. காரணம் இருக்கு இந்திய அரசின் புரிதலற்ற பொருளாதார கொள்கையின் படி தமிழர் நிலத்தில் இருக்கும் கச்சா எண்ணெய் மற்றும் மீத்தேன், ஷெல் எரிவாயு, கைட்ரோ கார்பன் அனைத்தையும் எடுத்துவிட்டு அதன் பிறகு அதற்கிடையில் இருக்கிற நிலக்கரி அதன் கீழ் இருக்கிற கனிமவளங்களை எடுத்து விற்று தன்னுடைய பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள எத்தணிக்கிறது இதற்கு பல்லாயிரம் ஆண்டுகளாக நடக்கின்ற தமிழர் ஆரிய இனப்பகையும் இதற்கொரு காரணமாக இருக்கிறது. தமிழரினத்தை அழித்து தமிழர் நிலத்தை அபகரித்து தனது வளத்தை பெருக்கி கொள்வதே அவர்களின் திட்டம் என்று கணிக்க முடிகிறது.

இதைத்தான் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நாட்டின் வளர்ச்சிக்காக விவசாயிகள் படிப்படியாக விவசாயத்தை விட்டு விலகி வேறு தொழிலை செய்ய வேண்டும் என்று கூறினார். இதைவிட அப்பட்டமாக பாசக தேசிய பொறுப்பாளர் இல.கணேசன் ஒரு நாட்டின் நலனிற்காக ஒரு மாநிலம் தியாகம் செய்ய தான் வேண்டும் என்று கூறினார் அந்த தியாகம் தான் இவர்களின் இத்திட்டம். இதற்கு ஏற்றார்போல தான் தமிழர்நிலத்தில் ONGC நாம் எதிர்பார்ப்பதற்கும் மேலாக அடக்குமுறைகளை ஏவி தனது கட்டுப்பாட்டிற்குள் தமிழர் நிலத்தை கொண்டு வர முயற்சி செய்கிறது இருந்தாலும் தமிழர்களின் போர்குணத்தால் இதுவரை இவர்களின் திட்டம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்த பேராபத்தில் இருந்து தமிழர் நிலத்தை காப்பாற்றி நமது சந்ததிகளுக்குக் கொடுக்க மீண்டும் ஒரு விடுதலை போரை தொடங்கும் கட்டத்தில் தான் நாம் இருக்கின்றோம்.

இப்போதும் நாமோ நமது போராட்டமோ வென்றுவிடவில்லை நம்மை ஒடுக்க வேண்டிய அவசியம் இன்னும் அவர்களுக்கு ஏற்படவில்லை காரணம் அவர்கள் தற்போது தான் வெளியேற்றப்படுகிற இயற்கை வாயுவை கடத்த கெயில் குழாய் பதிப்புகளும், கனிம வளங்களை ஏற்றுமதி செய்ய கடல்புறத்தை ஆக்கிரமிக்கும் சாகர்மாலா திட்டத்தையும், தேவையான பொருட்களை கிணறு அமைக்கும் இடத்திற்கு கொண்டு செல்ல, வெளியேற்ற சாலை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை செய்வதற்கு தேவையான அடிப்படை வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படை பணிகள் முடிந்து வேலையை தொடங்குவதற்கு முன் தனது அடுக்குமுறையை கட்டவிழ்த்து விடுவார்கள். அதற்குள் இன்றிலிருந்து போராடி வழக்குகள் பல சந்தித்து ஓய்ந்து விடுவோம் என்பது அவர்களின் கணக்கு.

ஆனால் தமிழரினத்தை அவ்வளவு எளிதில் அடக்கிவிட முடியாது என்பது அவர்களுக்கு தெரியவில்லை. நிலைமை இப்படி இருக்க, காவிரியில் தமிழர்களுக்கு உரிய உரிமையை அவர்கள் எப்படி கொடுப்பார்கள். அப்படியே கொடுத்தால் விவசாயம் தழைத்தோங்கும். விவசாயிகள் வளம் பெறுவார்கள். உள்ளூர் பொருளாதாரம் வலிமையாக இருக்கும். பிறகு எப்படி இவர்களை வெளியேற்றி தனது கனிம வேட்டையை தொடர முடியும். இந்த 177.25 ஆ.மி.க நீரை கொடுப்பது கூட நீரியல் விரிசல் முறையில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு அதிகப்படியான நீரும், மணலும் தேவை அதற்காகவும் இருக்கலாம் என்ற சந்தேகமும் ஒரு ஓரத்தில் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

இதிலிருந்து விடுபட ஒரே வழி காவிரி இறுதி தீர்ப்பின் படி காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நதிநீர் பங்கீட்டு குழு இரண்டையும் அமைத்து முறைத்தவறாமல் 177.25 ஆ.மி.க நீரை கர்நாடகத்திடமிருந்து பெற வேண்டும். அதனை சரியான முறையில் சேமிக்க குளம், குட்டை, ஏரி, கண்மாய், வாய்க்கால், வடிகால், ஆறுகள் என்று அனைத்தையும் தூர்வாரி விவசாயத்திற்கு சரியான முறையில் நீரைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு அரசையோ அரசியல்வாதிகளையோ எதிர்பார்த்து மீண்டும் ஏமாறாமல் நமது முன்னவர்கள் போல ஊர்மராமத்து பணியில் இளைஞர்கள் இணைந்து அவரவர் பகுதிகளை அவரவர் பாதுகாத்து கொள்ள வேண்டும்.

தடுப்பணைகள் கட்ட அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டை முழுவதும் குறைக்க வேண்டும். இல்லையேல் ‘‘தண்ணீர் சட்டமென்று’’ வரவிருக்கிறது அதன்படி நிலத்தடி உரிமைகள் பெரிய முதலாளிகளுக்கோ அல்லது பன்னாட்டு நிறுவனங்களுக்கோ ஒப்பந்த அடிப்படையில் கொடுத்துவிடுவது. அவர்கள் நீங்கள் பயன்படுத்தும் நீரை அளவிட கருவியை பொருத்தி அதற்கான கட்டணத்தை வசூல் செய்துகொள்வார்கள் அதாவது உங்கள் நிலத்தின் கீழ் இருக்கும் நீரிற்கு அதாணிக்கும் அம்பானிக்கும் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உங்களுக்கு வரும்.

இப்படிப்பட்ட சூழ்ச்சிகளுக்கு மத்தியில் தான் நாம் போராட்டத்தோடு வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இனியும் தாமதித்தால் விளைவுகள் மோசமாகிவிடும். அதற்கு பதிலாக முன்னெச்சரிக்கையாக சிந்தித்து முறையாக தண்ணீரை பயன்படுத்துவதன் மூலம் விவசாயம் வளரும் அதன் மூலம் நமது வாழ்வாதாரமும் உயரும். வரப்புயர கோனுயரும் என்று ஔவையார் சொன்னதை போல தமிழர்களின் பொருளாதார பலம் உயரும் பொருளாதாரம் உயர்ந்த மக்களை எவரும் அச்சுறுத்தி வெளியேற்றிவிட முடியாது.

அதோடு காவிரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வை பெறுவதற்கு சட்ட திருத்தம் மேற்கொள்ள அரசை நிர்பந்திக்க வேண்டும். எல்லாம் முடிந்துவிட்டது இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று எவரும் நினைக்க வேண்டாம். மக்களுக்காக தான் சட்டங்களே தவிர சட்டத்திற்காக மக்கள் கிடையாது. தாமதிக்காமல் தமிழரினம் திரண்டெழுந்து காளையை காக்க பண்பாட்டை மீட்டெக்க களம் கண்டதை போல தனது வாழ்வியலை மீட்க மீண்டும் களம் அமைத்தால் மட்டுமே தமிழர் வாழ்வியலை மீட்டெடுக்க இயலும்.

‘‘சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ<br>வழியிட்ட வாள் காண வாரீர்’’

என்று மைசூரை ஆண்ட போசள மன்னன் நரசிம்மன் காவிரி நீரைத் தர மறுத்த போது இரண்டாம் ராசராசன் படை அனுப்பி காவிரி நீரைக் கொண்டு வந்ததைப் போல இன்றைய சனநாயக நடைமுறைக்கு உட்பட்டு தமிழரின் அறத்தின் படி எவர் மீதும் வெறுப்பு கொள்ளாது தமிழர் நிலத்தினை காக்கும் உணர்வுகொண்டு களத்தில் நின்றால் காவிரியை மீட்க முடியும், தமிழர் நிலத்தை காக்க முடியும்.

இனியாவது விழித்தெழு தமிழா

**- இராசசேகரன் மன்னை**

# கண்ணீரின் மொழி

தாயின் கருவறையிலிருந்து
முதன்முறை குழந்தை
உலகைப் பார்த்த பொழுது
வந்த கண்ணீர் தாயின் முகம்
கண்ட ஆனந்த கண்ணீர்!

தவழ முயற்சி செய்து
அடிப்பட்ட பொழுது முதல்முறை
தோல்வியுற்ற வலியின் கண்ணீர்!

தாய் தந்தை
இவர்கள் தானென்று அறிந்த தருணம்
அவர்களை ஓர் நொடி காணமால் போனால்
வரும் கண்ணீர் தவிப்பின் முதல் கண்ணீர்!

முதல்முறை பள்ளிக்கு செல்லும்போது
தான் வாழ்ந்த சூழலிருந்து
மாறுபட்ட சூழலை பற்றிய பயத்தின்
கண்ணீர்!


தேர்வில் வெற்றி பெற்று
பெற்றோரை பெருமை
கொள்ளச் செய்யும் பொழுது
வரும் கண்ணீர் ஆனந்த கண்ணீர்!

பள்ளி நட்பை முதன்முறை பிரிந்து
கல்லூரிக்கு பயணிக்கும் பொழுது
வரும் கண்ணீர் பிரிவின் கண்ணீர்!

கல்லூரி நட்பு காலம் கரைந்தாலும்
நினைவில் நின்று வாழும் நட்பு
அதை பிரியும் போது உலகத்தை பற்றிய
பயத்தின் தயக்கத்தின் கண்ணீர்

வேலைத்தேடி திரியும் போது
பெற்றோரும் மற்றவரும் தூற்றும் போது
விரக்தியில் வரும் கண்ணீர்!

தனக்கான அடையாளத்தை அடைந்து
பெற்றோரோடு வாழ நினைக்கும் போது
பருவம் வந்ததடி மணமேடை ஏறி



ஓவியம்
திவ்யா ராஜராஜன்

அவளுக்கானவனோடு மணமாகி செல்லும் போது
ஏற்படும் கண்ணீர் வாழ்ந்த வீட்டின் சுவடுகளை
ஏந்திச் செல்ல தயாராகும் கண்ணீர்!

ஊர்கூடி வந்து அவளை
அவன் வீட்டிற்கு அழைத்து செல்ல வரும் போது
ஏனோ வீட்டில் உள்ள ஒவ்வொருவரையும்
அணைத்து அவளை அறியாமல் சிந்தும் கண்ணீர்
இதயத்துடிப்பின் கண்ணீர்!

அவனே கதி என்று செல்ல
அங்கு புதிதாய் எல்லோரும் பழக
அவர்களின் இயல்பு வாழ்வில் நுழைய
முயற்சி செய்யும் போது வரும் கண்ணீர்
கூற இயலாத இன்னல்களின் கண்ணீர்!

மசக்கையில் தாயின் மடியில் தூங்க ஆசைப்படும்
அவள் எண்ணங்கள் கணவனை பிரிந்து இருக்க
இயலாமல் துடிக்கும் இதயம் எண்ணங்களுக்கும்
இதயத்துக்கும் ஏற்படும் கண்ணீர் தவிப்பின் கண்ணீர்!

தன்பிள்ளையை ஆளாக்கி
அடுத்த வீட்டில் மருமகளாய் அனுப்புகையில் வரும்
கண்ணீர் கடைசிவரை தன்பிள்ளை
நம்மோடு இருக்க இயலாது என்ற
ஏக்கத்தின் கண்ணீர்!

பாட்டி ஆகி பேரனுக்கும் பேத்திக்கும்
கதை சொல்லி பாசமழையில் நனைந்து
இந்த உலகை மறந்து வயது மூப்பின் காரணமாய்
இயற்கை எய்தும் போது வரும் கண்ணீர்
வாழ்ந்த வாழ்வியலின் முடிவியலின் கண்ணீர்!

கண்ணீர் வெறும் கண்ணீர் அல்ல
அது பேசிகிற ஆயிரம் மொழிகளை
யார் அறிவார் கண்ணீரின் மொழியை!

---

இப்படிக்கு **கண்ணம்மா (எ) EGR**
உள்ளிக்கோட்டை

# வேலைப்பளு

இன்று அனைத்து தரப்பினரும் பொதுவாக பயன்படுத்தும் ஒரு வார்த்தை வேலைப்பளு. பிறப்பு, இறப்பு, சுபநிகழ்ச்சிகள் ஆகியவற்றில் தன்னால் கலந்துக்கொள்ள முடியவில்லை என்றால் உடனே நாம் கூறுவது வேலைப்பளு.

உதாரணத்திற்கு, நம் நண்பர் அவர் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுக்கிறார். ஆனால் அன்றைய தினம் வேலையில் மும்முரமாய் இருந்ததால் செல்ல முடியவில்லை. நம் உடன்பிறந்தவர்களுக்கும் திருமணம் நடக்கிறது, அன்றும் அதே வேலை தான் ஆனால் அதை ஒதுக்கிவைத்து கலந்துக்கொள்வோம்.

அதே போல், ஒருவர் நம்மை அழைக்கிறார் நாம் வேலையில் மும்மரமாக இருப்பதால் வர இயலாது என்று கூறிவிடுகிறோம். ஆனால் அதே சமயம் நம் உடன் வேலை பார்ப்பவருடன் வெகு நேரம் பேசிக்கொண்டு இருப்போம் அவருடன் தேநீர் அருந்த சென்று வருவோம்.

ஆக, நம்மை சுற்றி இருக்கும் வேலைகளில் எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம் என்பதை மறைக்கும் வார்த்தையே இந்த வேலைப்பளு. ஆகவே நாம் தவிர்க்கும் சில முக்கிய விஷயங்களுக்கு வேலைப்பளுவை காரணம் காட்டுவது தவறு.

சரி. வேலைப்பளு என்பது அனைவருக்கும் உள்ளது தான். ஆனால் சில தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு வேலைப்பளு மட்டுமல்ல வேலை அழுத்தம், வேலை சித்ரவதை, வேலை அரசியல் ஆகியவற்றையும் எதிர்க்கொள்ள வேண்டியுள்ளது. அவற்றை பற்றி காண்போம்.

1) வேலைப்பளு - Work load
2) வேலை அழுத்தம் - Work pressure
3) வேலை சித்ரவதை - Work torture
4) வேலை அரசியல் - Work politics

வேலைப்பளு
இது அனைவருக்கும் உண்டான ஒரு பொதுவான பணிச்சுமை. உதாரணத்திற்கு: நீங்கள் ஒருவர் மட்டும் இங்கிருக்கும் 500 செங்கல் கற்களை வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்பது.

வேலை அழுத்தம்
நீங்கள் ஒருவர் மட்டும் இங்கிருக்கும் 500 செங்கல் கற்களை 2 மணி நேரத்திற்குள் வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்பது.

அதாவது ஒரு வேலைக்கு கால அளவு கொடுத்து நமக்கு அழுத்தம் கொடுப்பது.

## வேலை சித்ரவதை

நீங்கள் ஒருவர் மட்டும் இங்கிருக்கும் 500 செங்கல் கற்களையும் ஆற்று மணலையும் வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்பது. அவற்றை செய்யும் போதே நம்மை ''இப்படி செய்ய வேண்டும், அப்படி செய்ய வேண்டும், இப்படி செய்தால் எப்போது முடிக்க முடியும்?'' என்று உடனிருந்து தொந்தரவு செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்குவது.

## வேலை அரசியல்

இது கடைசி கட்டம். நம்மை வேலையில் இருந்து நீக்க பயன்படுத்துவது. அதாவது, நீங்கள் ஒருவர் மட்டும் இங்கிருக்கும் 500 செங்கல் கற்களையும் ஆற்று மணலையும் வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்பது. மேலும் ஒரு வேலையை கொடுத்து அவற்றில் ஒரு வேலையை செய்யும் போது '' ஏன் அதை செய்யவில்லை?, இதை எப்போது முடிப்பாய்?'' என்று மாற்றி மாற்றி வேலையை செய்யவிடாமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கி தொந்தரவு செய்து கடைசியில் நாம் வேலை ஒழுங்காக செய்யவில்லை என்று கூறி வேலையில் இருந்து நீக்குவது.

இதில் முதலாவதாக உள்ள வேலைப்பளு அனைவருக்கும் உள்ளது தான். ஆனால் மற்ற மூன்றிலும் சிக்கிக் கொள்ளாதீர்கள். அவை உடல் நலத்திற்கு மட்டுமல்ல மனநலத்திற்கும் கேடு.

நன்றி.



- பாலாஜி சுதந்திரராஜன்
மன்னை

# அட்டப்பாடி மதுவும் நம்மாழ்வார் ஏரியும்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

''இயற்கையின் ஒரு பகுதிதான் மனிதன். ஆனால் அவன் இயற்கை மீதே போர் தொடுத்துக் கொண்டிருக்கிறான். உண்மையில் அவன், அவன்மீதே போர் தொடுக்கிறான்''

- ரேச்சல் கார்சன்

அட்டப்பாடியில் மது அடிபட்டு சாவதற்கும் நம்மாழ்வார் ஏரியில் நீர் இல்லாததற்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா? நாம் காலையில் அருந்தும் தேநீருக்கும், செம்மர கடத்தலில் ஈடுபட்டு உயிரிழக்கும் நம் தொழிலாளர்க்கும் ஏதும் சம்பந்தம் உள்ளதா? என்ன இது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சி போடுகிறீர் என நினைக்கிறீரா? ஆம் இம்முடிச்சிகளில் தான் பெரும் வரலாறும் வரும் காலமும் பொதிந்து கிடக்கிறது.

சுதந்திர இந்தியாவில் நேரு தலைமையில் முதல் காரிய தரிசிகள் கூட்டம் நடைபெறுகிறது. அதில் முக்கியமாக இந்திய நிர்வாக துறையைப் பற்றி விவாதிக்கப்படுகிறது. அனைவரும் வெள்ளையர்கள் நியமித்த அதிகாரிகளையும் அதிகார முறைகளையும் நீக்கி நாமே உருவாக்குவோம் என்கின்றனர் அதற்க்கு நேரு அவர்கள் அரசுக்கு தான் விசுவாசமாக இருப்பார்களே ஒழிய வெள்ளையருக்கு அல்ல என கூறி அதே நிர்வாக முறையை தொடர அனுமதித்தார். ஒருவேளை அப்பொழுது நேரு தன் சகாக்கள் சொல்வதை கேட்டிருந்தால் இந்தியா இன்று இருந்திருக்காது. குழப்பத்திலும் நிர்வாக தோல்வியிலும் சீரழிந்து போயிருக்கும். அதற்கான உதாரணங்கள் தான் பாகிஸ்தானும் பங்களா தேசமும். எவ்வாறு நல்லதை ஏற்றுகொண்டோமோ அதை விட மோசமாக அவர்கள் கற்பித்த சுரண்டலையும், காலனியாதிக்கத்தையும் நம் அரசுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

அரபிக் கடலிலிருந்து வீசும் தென்மேற்கு பருவ காற்று மேற்கு தொடர்ச்சி மலையில் மோதி மழைப்பொழிவை ஏற்படுத்துகிறது. இந்த மழைத் துளி ஓடையாக, ஆறுகளாக மாறி நிலப்பரப்பில் பாய்ந்து ஓடுகிறது. இந்த இயற்கை சுழற்சி வெள்ளையர்கள் இந்தியாவிற்கு வரும் வரை சரியாகவே நடைபெற்றுக் கொண்டு இருந்தது. ஆனால் தற்பொழுது முழுவதும் தடம் மாறி போய் விட்டது. உங்களுக்கு தோன்றலாம் இப்பொழுதும் அரபிக் கடல் இருக்கிறது, மேற்கு தொடர்ச்சி மலையும் இருக்கிறது இதில் வெள்ளையர்கள் என்ன காற்றையா சிறை பிடித்தார்கள் என்றால், இல்லை காற்று மோதும் மலையை சிதைத்துவிட்டனர்.

அரபிக்கடலிலிருந்து வரும் தென்மேற்குப் பருவக் காற்று மலை உச்சியில் தடுக்கப்பட்டு மழையாக மாறுகிறது. இந்த மழை அப்படியே உச்சியில் உள்ள புல்களால்

முதல்கட்டமாக சேமிக்கபடுகிறது, அடுத்தாக வழிந்தோடி சரிவுகளில் உள்ள மரங்களின் வேர்களால் சேமிக்கப்படுகிறது, அதை தாண்டி வழிந்தோடும் நீர் ஓடைகளாகவும் ஆறுகளாகவும் உருப்பெற்று சமவெளி பகுதி முழுவதும் ஓடி இறுதியாக கடலில் கலக்கிறது. இங்கு புற்களிலும் மரங்களிலும் சேமிக்கப்படும் நீர்களும் சிறுக சிறுக வெளியேறி ஓடைகளிலும் ஆறுகளிலும் ஆண்டு முழுவதும் கலந்திடும். அதேபோல் பெய்யும் பணியும் புல்களிலும், மரவேர்களிலும் சேமிக்கப்பட்டு நீராக வெளியேறி ஆறுகளிலும் ஓடைகளிலும் கலந்திடும். இந்த இயற்கை சமநிலையை அங்கு இருந்த பழங்குடிகளும் விலங்குகளும் காத்து வளர்த்து வந்தனர், வெள்ளையர்களின் கால்கள் அங்கு படும் வரை.

இந்த காலகட்டத்தில் தான் நீலகிரி மலையின் தட்பவெப்பம் தம் நாட்டின் தட்ப வெப்பத்தை ஒத்துள்ளதை எதேச்சையாக கண்டறிந்த வெள்ளையர்கள் நீலகிரி மலையை தங்களுடைய ஓய்விடமாக மாற்றினர். அதற்காக சாலைகள், கட்டிடங்கள், ராணுவ முகாம் , மருத்துவமனை என அனைத்தையும் அங்கு அமைத்தன. இதற்காக உச்சியில் இருந்த புல்வெளியும் சரிவுகளில் இருந்த பல்லுயிர் வாழும் காடுகளும் அழிக்கப்பட்டன. இப்பணிகளுக்காக சமவெளியில் இருந்த போர் கைதிகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களைப் பயன்படுத்தினர். இச்செயல்களால் அம்மலைகளின் இயற்கை சமநிலை பாதிக்கப்பட்டது. அங்கு வாழ்ந்து வந்த பழங்குடிகள் மற்றும் இதர உயிரினங்கள் அங்கிருந்து துரத்தப்பட்டன.

வெள்ளையர்கள் கால்படாத வரை அம்மலை காடுகள் அங்கிருந்த பழங்குடிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கு அவர்கள் தேவையான பொழுது மட்டும் வேட்டையாடி வந்தனர். சில விலங்குகளை மட்டுமே வேட்டையாடுவர். அதிலும் அவற்றின் இனப்பெருக்க காலத்தில் வேட்டையாடுதலை நிறுத்திவிட்டு விவசாயம் செய்து உணவு உட்கொண்டனர். அவ்விவசாயத்திலும் ஓர் ஒழுங்கை கடைபிடித்தனர். ஒரு இடத்தில உள்ள மரங்களை வெட்டி அவற்றை தீயிட்டு அழிப்பர், அந்த சாம்பல் நிலத்தில் விவசாயம் செய்தனர். அதன்பிறகு அந்த நிலத்தை அப்படியே விட்டுவிட்டு வேறு இடத்திற்கு சென்றிடுவர். அந்த விடுபட்ட நிலத்திற்கு மீண்டு அவர்கள் வர குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் ஆகும். அதற்குள் அந்நிலம் காடுகளாக வளர்ந்து பல்லுயிர்கள் வாழ்ந்து வரும். இப்படி இயற்கையை சிதைக்காமல் வளர்த்து வந்த பழங்குடிகள் வெள்ளையர்களின் வருகையால் அவர்களுடைய காட்டின் மீதான உரிமையை இழந்தனர்.

ஓய்வெடுக்க வந்த வெள்ளையர்கள் அந்த மலைக்காடுகளில் வளர்ந்திருந்த தேக்கு மரத்தின் உறுதியை கண்டு கொள்கின்றனர்.ஐரோப்பாவில் உள்ள ஓக் மரத்தை போன்ற உறுதி இருப்பதால் அதுவரை கப்பல் கட்டுமானத்திற்கு பயன்படுத்திய ஐரோப்பிய ஓக் மரத்தை விடுத்து தேக்கை வெட்டி கப்பல் கட்ட ஆரம்பித்தனர். அதேபோல் ஏனைய மரங்களையும் அழித்து தேக்கை மட்டுமே நட ஆரம்பித்தனர். அக்கால கட்டத்தில் தான் எத்தியோப்பியாவில் கிடைத்த காப்பியின் சுவைக்கு அடிமையாகி அந்த காப்பி

கொட்டைகளை இம்மலைகளில் நட்டு வளர்க்க ஆரம்பிக்கின்றனர். அக்காப்பி செடிகளில் தொடர்ந்து நோய் தாக்கியதால் சீனாவின் தேயிலையை பயிரிட ஆரம்பிக்கின்றனர். இவ்வாறாக அம்மலைக்காடுகள் முழுவதும் கட்டிடங்கள், சாலைகள், தேக்குமரம், காப்பி மற்றும் தேயிலை செடிகளாக மாறியதால் பல்லுயிர் வாழ தகுதியற்றதாக காடு மாறுகிறது. இதனால் அங்குள்ள பெருவாரியான விலங்குகள் உணவில்லாமலும் வெள்ளையர்களின் வேட்டையினாலும் பலியாகின. அக்காலத்தில் ஒவ்வொரு விலங்கை வேட்டையாடி கொல்பவர்களுக்கு வெள்ளையர்கள் சன்மானம் அளித்தனர். இதனால் அதிகப்படியான விலங்குகள் கொல்லப்பட்டன.

இவ்வாறாக மலைக்காட்டின் உட்சியில் உள்ள புல், சரிவில் உள்ள பலவகையான மரங்கள், அங்கு வாழ்ந்துவந்த விலங்குகள், பழங்குடிகள் என முழு உயிர் சமநிலையும் பாதிக்கப்பட்டது. தன்னுடைய தேவைக்காக மேலும் மேலும் நகரங்களை மலையில் உருவாக்கியும் அவர்களுக்கு பணி செய்ய மக்களை சம்வெளியிலிருந்து அங்கு குடியமர்த்தியும் அம்மலை காடுகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தினர். தேயிலை, காப்பி போன்ற குட்டை செடிகளால் அரபிக்கடலிலிருந்து வரும் தென்மேற்கு பருவக்காற்றை பெருவாரியாக ஈர்க்க இயலவில்லை. அவற்றை தாண்டி வந்து பெய்யும் மலை கான்கிரீட் கட்டிடங்களில் விழுந்து தேயிலை, காபி செடிகள் வழியாக ஓடையாகவும் ஆறாகவும் ஓட ஆரம்பித்தன. தற்பொழுது மழைநீரை சேமிக்க புல்வெளிகளோ, பெரிய மர வேர்களோ இல்லாததால் ஆண்டு முழுதும் நீர் கொடுத்துக்கொண்டிருந்த அம்மலை காடுகள் குறிப்பிட்ட மழைப்பருவதில் மட்டும் அனைத்து நீரையும் வாங்கி கீழே அனுப்ப ஆரம்பித்தன. இதனால் சம வெளிப் பகுதியில் மழைக்காலங்களில் நீரோட்டம் அதிகமாகவும் ஏனைய காலங்களில் நீரோட்டம் இன்றியும் ஆனதால் அந்த நீரை ஆதாரமாக கொண்டு செய்துவந்த ஆற்றுவழி விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

வெள்ளையர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காடுகளால் பழங்குடிகள் வாழும் பகுதி சுருங்கியது. அங்கு மட்டுமே அவர்கள் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அதற்கும் வரி வசூல் வெள்ளையர்களால் செய்யப்பட்டது. அவர்கள் விலங்குகளை வேட்டையாடவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் சரிவர உணவு கிடைக்காமல் காட்டில் கிடைக்கும் கிழங்குகளையும் தேனையும் உண்டு வாழ்ந்து வந்தனர். அதேபோல் விலங்குகளும் தங்களுடைய வலசை பாதையை இழந்து உணவின்றி நீரின்றி வாழ இடமின்றி செத்து மடிந்தன.

ஒருவழியாக வெள்ளையர்கள் வெளியேறி இந்தியா சுதந்திர நாடானது. இந்திய அரசும் வெள்ளையர்கள் வழிகாட்டியப் படி இன்னும் வீரியமாக சுரண்ட ஆரம்பித்தனர். பல நிறுவனங்களுக்கு தேயிலை பயிரிட அனுமதித்தனர். பழங்குடிகளுக்கு எஞ்சியிருந்த காடுகளுக்குள் செல்லவும் தடை செய்யப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் வேறு வழியில்லாமல் பழங்குடிகள் அத்தோட்டத்தில் அடிமையாகவும் மரம் வெட்டி பிழைக்கவும் ஆரம்பித்தனர். வெள்ளையர்கள் வேட்டையாடும் நிலங்கள் வனவிலங்கு

சரணாலயமாக ஆக்கப்பட்டது. ஏனைய இடங்களில் விலங்குகள் வாழ இயலாத சூழல் உருவானது.

கடைசியாக மரம் வெட்டி பிழைப்பு நடத்திய பழங்குடிகளுக்கு மரம் வெட்டவும் அனுமதி மறுக்கப்பட்டது. வேறு வேலை தெரியாமல் திண்டாடிய அவர்களை மரம் கடத்தும் கும்பல் பயன்படுத்திக் கொண்டது. சட்டத் திட்டங்கள் அறியா அம்மக்கள் காட்டிலிருந்த விலையுயர்ந்த மரங்களை வெட்டி அதன்மூலம் சொற்ப சம்பளம் பெற்று வாழ ஆரம்பித்தனர். இவர்கள் தான் சந்தன மரம் வெட்டினார்கள், செம்மரம் வெட்டினார்கள் என கண்மூடித் தனமாக கொல்லப்பட்டும் சிறையிலடைக்கப்பட்டும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இருந்த கொஞ்ச நஞ்ச மரங்களும் வெட்டப்பட்டு அம்மலைக் காடுகள் மொட்டையடிக்கப்பட்டன. இதனால் மழைப்பொழிவுக் குறைந்தது. பெய்த மழையும் தேயிலை வேர்களில் தங்காததனால் ஆற்றில் வரும் நீரின் அளவு மேலும் குறைந்தது.

இப்பொழுது மீண்டும் முதல் பத்தியைப் படியுங்கள், மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் உண்டான அர்த்தமும் அதற்குள் உள்ள முடிச்சுகளும் புலப்படும். இப்பிரச்சனையை உணர்ந்து அம்மலையில் மீண்டும் பல்லுயிர் வாழும் காடுகளை வளர்க்கவில்லையெனில் கேப்டவுனின் நீரற்ற நிலை தான் சமவெளிக்கு ஏற்படும். அட்டப்பாடி மதுவைப் போல், செம்மரக்கடத்தலில் உயிர்விடுபவர்கள் போல், தான் எஞ்சிய பழங்குடிகளும் இறக்க நேரிடும்.

விழிப்போம்...

நன்றி.

**– ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY
**வசந்தன்**
hp: 9786828973
vasaclicks@gmail.com
vasa photography

# என் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும்



செந்தில்குமரன்
மன்னார்குடி

குடிப்பழக்கம் இல்லாத மாப்பிள்ளையா பார்த்து சொல்லுங்களேன் என்றவுடன் ''யாருங்க இப்ப குடிக்காம இருக்கா, பொம்பளபுள்ளைகளே இப்ப குடிக்குது!'' என்ற அழகிய வார்த்தைகளை அடிக்கடி கேட்கலாம்.

அப்ப ஊருல குடிக்காதவனே இல்லையா? தண்ணி அடிக்கிறவன் கெட்டவன், அடிக்காதவன் நல்லவனா?? என நீங்கள் கேட்கலாம். அதற்கான பதில் இதோ!

எதிர்பாராத விதமாக நண்பர் ஒருவரின் பேச்சிலர் பார்ட்டியில் பால்ய நண்பனை பார்க்க நேர்ந்தது. எல்லாரும் குடிச்சிப்புட்டு குப்புறப் படுத்துக் கிடக்கையில் அவன் மட்டும் சிப்ஸ் தின்னுட்டு இருந்தான். ஏன்டா விரதமானு கேட்டா, 'எனக்கு அந்த வாடையே பிடிக்காது' என்றான்.

இவன் மட்டும் எப்படி தப்பிச்சானு மனசுக்குள் நினைச்சிட்டு, பிடிக்கலனா காரணம் சொல்லுனு சொன்னேன். அதுக்கு அவன் ''நான் சின்ன வயசுலேந்து பார்த்தது எல்லாம், ரவுடிப்பயலுக, ஊதாரிக குடிச்சிப்புட்டு வாந்தியில் உருண்டு, சாக்கடையில் ஊறினவர்கள் தான் அதுமட்டுமா, குடிச்சி குடும்பத்தையே ரோட்ல நிறுத்துனவனும் தான் இன்னும் என் கண்ணுல நிக்கிறானுக.

அதான், சரக்குனாலே எனக்கு ஆகாது, ஆனா சரக்கு எப்படி அடிக்கணும், அதுல என்ன சுகமெல்லாம் இருக்குனு ஒருவர் மூலமா இப்பதான் தெரிஞ்சிக்கிட்டேன்.. ஆனாலும் என் மனது இன்று வரை அதுக்கு சம்மதிக்க மறுக்கிறது! என்றான்.

குடிக்காதவனுக்கு இதுவும் ஒரு காரணம் என்றால் குடிக்கிறவன் என்ன காரணம் வச்சி குடிப்பான்? வயசானவரா இருந்தா எல்லாம் அனுபவிச்சாச்சி, செத்தாலும் பிரச்சினைஇல்லைனு சொல்லிட்டு குடிக்கிறான்.

நடுத்தர வயதுக்காரர்கள் என்றால் குடும்ப பிரச்சினை, பொண்டாட்டி பிரச்சினைனு குடிக்கிறான். இளவயசுக காதல் தோல்வி, கெத்துனு சொல்லிட்டு குடிச்சு கும்மாளம் அடிக்கிறார்கள். ஆக மொத்தம், கல்யாண வீடுனாலும் கருமாதி வீடுனாலும் குடிச்சா தான் மன திருப்தியே இவர்களுக்கு!

சில பேர் தனியா குடிக்காம, துணைக்கு ஆளு இருந்தா மட்டும் குடிப்பாங்க ஏன்னா, குடிச்சிட்டு விழுந்து கிடந்தா தூக்கிட்டு போக. அதுலயும் சில பேர், சொந்த காசுல

வாங்கி குடிக்க மாட்டாங்க.பார்ட்டி,ட்ரீட் னா மட்டும் குடிப்பது! தனிமையில் இனிமைனு குடிச்சிட்டு வரவங்களும் இருக்காங்க, வீட்டுக்கு வாங்கிட்டு வந்து குடும்பத்தோட குடிக்கிறவங்களும் இருக்காங்க

மது நாட்டுக்கு வீட்டுக்கு கேடு, குடி குடியைக் கெடுக்கும் என்று எழுதி வைத்து விட்டால் மட்டும் போதுமா? மது, ஒரு கவர்ச்சிப் பொருளாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

கவர்ச்சிக்கு தானே மவுசு அதிகம்? கவர்ச்சியை களைவதில் பெற்றோர்களுக்கே முக்கிய பங்கு உண்டு. காமம் பற்றி பொதுவெளியில் பேசுவது எவ்வளவு அசிங்கமாக பார்க்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு குடும்பத்திற்குள் மது குடிப்பது பார்க்கப்படுகிறது. ஒரு தடவை சூடு கண்ட பூனை, மீண்டும் தொடுமா என்ன? அது போல தான், முதல்முறை சுவாரசியமே இல்லாமல் மதுவை குடித்தால் அடுத்த முறை போரடித்து விடும்.

இருந்தாலும் மது நல்லதுன்னு சொல்றாங்க, அதை அடுத்த பதிவில் சொல்கிறேன்.

**இரா. செந்தில் குமரன்**
மன்னார்குடி



மன்னை ரஞ்சித்

# ஏழை வீட்டு ஓலை குடுசை....

ஓட்டை விழுந்த ஒவ்வொரு துளையும்
நட்சத்திரத்தை எண்ணி சொல்லும்....

மடித்துப்போன ஒவ்வொரு மூங்கில் குச்சும்
மரத்தின் வலியை சொல்லும்....

வெயில்காலம் இதுக்கு குளிந்த காலம்...
மழைக்காலம் அதுதான் கொஞ்சம் சிரமம்...

சிதைந்த சுவரெல்லாம் சித்திரம் காட்டும்...
உடைந்த கதவெல்லாம்
காற்றை விற்கும்...

இரவெல்லாம் கொசுகள் சங்கீதம் பாடும்
பகலெல்லாம் நாய் சற்று இளப்பாறி
செல்லும்....

இவற்றிலிருந்து மீள முயற்சிக்கிறான்
பொருளாதாரத்தை மீட்டு......

ஏழை வீட்டு ஓலை குடுசை...

# எரி பொருள் வரி



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

''மாற்றம் ஒன்றே இந்த உலகில் மாறாத ஒன்று''.
இது போல் மாறாத பல விடயங்களில் பெட்ரோல் விலை உயர்வும் ஒன்று. இந்தியாவில் தினமும் ஏறக்கூடிய விடயங்கள் இரண்டு. ஒன்று பெட்ரோல் விலை. மற்றொன்று அதை பார்த்து ஏறும் நம் ரத்தக்கொதிப்பு.

எந்த அரசாங்கம் ஆட்சி செய்தாலும் ,விலைவாசி உயர்வில் ஏற்ற இறக்கம் இருந்தாலும், கச்சா எண்ணெய் விலை சரிவு அடைந்தாலும் பெட்ரோல் விலை உயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

இதன் காரணம் என்ன என்று பார்த்தால், அரசாங்கம் தன் நிதி தேவைக்கு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு பெரிதும் நம்பி இருப்பது பெட்ரோலைத் தான். பெட்ரோல் என்பது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு விற்பனைப் பொருள் மட்டும் அல்ல. (தங்கம், வெள்ளி, உணவுப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் போல).

அது அரசாங்கத்தின் தேவையை நிறைவு செய்யும் ஒரு கருவி. இன்னும் சொல்லப் போனால் அது அரசு நிர்வாகத்திற்காக மக்கள் மீது சுமத்தப்படும் ஒரு வகையான வரி. வீட்டு வரி, குடிநீர் வரி மற்றும் வருமான வரி போல் பெட்ரோல் என்பது ஒரு ''வரி விதிப்பு''. எப்படி என்று விரிவாக பார்ப்போம்.

பெட்ரோல் என்பது நேரடியாக கிடைக்கும் ஒரு பொருள் அல்ல. கச்சா எண்ணெயில் இருந்து பிரித்து எடுக்கப்படும் ஒரு திரவம். டீசல், மண் எண்ணெய், தார் இவை யாவும் அப்படியே.

ஆனால் நம்மிடம் அந்த கச்சா எண்ணெய் கிடையாது. எனவே அரபு நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போதைய நிலவரப்படி (2018,பிப்ரவரி) ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 65.5 அமெரிக்கன் டாலர் மதிப்பிற்கு வாங்கப்படுகிறது. அதாவது இந்திய மதிப்பிற்கு ரூ.4200/- ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 159 லிட்டர் கொள்ளளவு கொண்டது.

அப்படி பார்க்கும் போது ஒரு லிட்டர் கச்சா எண்ணெய் ரூ.26.42/-

பின் அதற்கான நுழைவு வரி, சுத்திகரிப்புக்கு ஆகும் செலவு, இறக்குமதி செலவு மற்றும் இதர செயல்முறை செலவுகள் எல்லாம் சேர்த்து ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ 4.75/- (டீசலுக்கு இது இன்னும் அதிகம்).

பின் எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணெய் இழப்பீட்டு செலவு (omc margin), போக்குவரத்து செலவு, கப்பல் போக்குவரத்து செலவு இவை எல்லாம் சேர்த்து ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.3.31/- (டீசலுக்கு இது சற்று குறைவு).

ஆக மொத்தம் வாகனங்களுக்கு பயன்படும்படி உள்ள பெட்ரோலின் மொத்த விலை ரூ 34.48.

என்ன நம்ப முடியவில்லையா? இது தான் இறுதியான பெட்ரோல் விலை. இந்த விலைக்கு தான் நம் அண்டை நாடுகள் நேபாளம், இலங்கை போன்ற நாடுகள் நம்மிடம் இருந்து வாங்குகிறார்கள். ஆனால் நாம் தற்போது இந்தியாவில் பெட்ரோலுக்கு கொடுக்கும் விலையை விட அவர்கள் குறைவாகவே விற்கிறார்கள். இதன் காரணம் என்ன என்று பார்ப்போம்.

இந்த 34.48 ரூ பெட்ரோல் விலையோடு மத்திய அரசின் உள் நாட்டு பொருள் வரி (excise duty) மற்றும் சாலை வரி (road cess) சேர்க்கப்படுகிறது. இந்த வரி 1 லிட்டருக்கு ரூ.19.48/- சேர்க்கப்படுகிறது. இது பெட்ரோலின் அடக்க விலையில் ஏறக்குறைய 57% ஆகும்.(டீசலுக்கு சற்று குறைவான வரியே)

அப்படி பார்க்கையில் இப்போது பெட்ரோல் விலை ரூ.53.96/-

பின் பெட்ரோல் பம்ப் பங்கீடு செய்பவர்களுக்கான நிதி (dealer commision) ரூ.3.59/-. எனவே இப்போது பெட்ரோலின் விலை ரூ.57.55/-

அதான் எல்லா வரியும் முடிஞ்சுடுச்சே. அப்புறம் என்ன இதே விலைக்கு கொடுக்கலாமே என்று தானே நினைக்கிறீர்கள்.

அப்புறம் மாநில அரசுக்கு என்ன லாபம்?

வடிவேலு நகைச்சுவை போல, மத்திய அரசு பெட்ரோல் விலையை மூச்சு திணறும் அளவிற்கு அடித்து நொறுக்கிய பின் மாநில அரசிடம் கை மாற்றி விடுகிறது. இப்ப மாநில அரசு எப்படி மூச்சுத் திணற திணற அடிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

மாநில அரசு மதிப்பு கூட்டு வரி என்ற பெயரில் (VAT) 27% பெட்ரோலுக்கும், 16.75% டீசலுக்கும் விதிக்கிறது. இது ஒவ்வொரு மாநிலத்திற்கும் சிறிய அளவில் மாற்றம் உண்டு. மேலும் இதனோடு 25 காசு மாசு வரியாக விதிக்கிறது.

இது ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ15.54 ஆகும்.

இப்படியாக பெட்ரோல் பம்புக்கு வரும் பெட்ரோலின் விலை ரூ.73.09/- (இந்த கட்டுரை எழுதும் நேரத்துல) ஆகிறது.

ஆக வெறும் ரூ.35/- ல் இருந்து பெட்ரோல் விலை ரூ.73/- ஆனது இப்படித் தான்.

நம் எல்லோர் மனதில் தோன்றும் கேள்வி ஒன்று உண்டு.அதெல்லாம் சரிங்க.வரி என்பது நிலையானது. ஆனால் கச்சா எண்ணெய் விலை மாறக்கூடியது தானே. அப்படி என்றால் அதன் விலை குறையும் போது பெட்ரோல் விலை குறைய வேண்டுமே என்ற மிக மிக நியாயமான கேள்வி அனைவர் மனதிலும் தோன்றலாம்.

சரியான கேள்விதான்.

நான் முன்பே இந்த கட்டுரையில் குறிப்பிட்டது போல பெட்ரோல் என்பது மக்களின் தேவையை நிறைவு செய்யும் ஒரு விற்பனைப் பொருள் மட்டுமல்ல.அது அரசின் வருவாயை தீர்மானிக்கும் ஒரு மாபெரும் சக்தி. அதை ஒரு வரியாக மட்டுமே அரசு பயன்படுத்தும்.

உதாரணமாக ,கச்சா எண்ணெய் விலை ஒரு லிட்டர் 30 ரூ என்று வைத்து கொள்வோம். அதற்கான அரசின் வரி 50% என்று வைத்து கொள்வோம். இப்போது அரசுக்கு கிடைக்கும் வருவாய் ரூ.15/-.

ஒரு வேளை கச்சா எண்ணெய் விலை சரிவு ஏற்பட்டு ரூ20 என்று ஆகும் போது அரசு அதே 50% வரியை விதித்தால், அரசுக்கு வருமானம் ரூ10 மட்டுமே. லிட்டருக்கு ரூ.5/- இழப்பு.

எனவே அதை இழக்க விரும்பாத மத்திய மாநில அரசுகள் வரியை 75% ஏற்றி விடும். இப்போது அதே 15 ரூ கிடைத்து விடும். இதே போல் கச்சா எண்ணெய் விலை உயர்வு ஏற்படும் போது அதற்கான வரியின் மதிப்பு அதிகமாகும். எனவே வரி குறைய வாய்ப்பு உள்ளது. ஆனால் கச்சா எண்ணெய்க்கு கூடும் செலவை மக்கள் தலையில் தான் கட்ட முடியும். எனவே பெட்ரோல் விலை ஏறத்தான் செய்யும். இது தான் பெட்ரோல் விலையின் உயர்வு மாறாமல் இருக்க காரணம்.

வேறு வழியே இல்லையா என்று கேட்டால் ,பெட்ரோல் விற்பனையில் ‘‘இரட்டை விலை கொள்கை’’யை தான் பின்பற்ற வேண்டும். இது ஏற்கனவே விவாதிக்கப்பட்ட ஒரு வழிமுறைதான்.

அதாவது மக்களுக்கு மிக அவசியமாக பயன்படும் அவசர ஊர்தி, பேருந்து, சரக்கு லாரி, தானி போன்ற வாகனங்களுக்கு நியாயமான விலையும், கார், வேன், இரு சக்கர வாகனம் போன்றவற்றிற்கு கொஞ்சம் அதிக விலையும் விதிக்கலாம். ஆனால் அது

நடைமுறை சாத்தியத்தை பொறுத்தது.

ஆக பெட்ரோல் என்பது மக்கள் மீது சுமத்தப்படும் ஒரு வரி என்பது சரிதானே!

- மன்னை செந்தில் பக்கிரிசாமி

---

# வாக்கு இயந்திரம் (தந்திரம்)



ராஜேஷ்
மன்னை

இந்தியம் வீழப்போவது
இந்த இயந்திரத்தால் .........

பாதுகாப்பு இல்லை என
பல நாடுகள் ஒதுக்கியும்
இந்தியா ஏற்றது ஏன்?

இங்கே ஆள்வது
சிங்கமல்ல..
எச்சில்களை கூட
மிச்சம் வைக்காத
சிறுநரிக் கூட்டம்
வஞ்சம் கொட்டி
வடிவமைத்த
தந்திரக்கார
இயந்திரம் இது..

கண்கட்டி வித்தை காட்டும்
களவாணி கூட்டத்தின்
கலுத்தருக்கும்
கருவி இது..

திரிபுராவை தின்று
தீர்த்தது இந்த
ஓட்டையே உருவான
ஓட்டு இயந்திரம்...

# திரைப்படமும், ரசிகனும்



நிரஞ்சன்
மன்னார்குடி

ரசிகர் மன்றம் நடிகர்களுக்கு வைக்காமல்
இயக்குனர்களுக்கு வைத்தால்
சண்டைகள் ஆரோக்கியமானதாக இருக்கும்.

நடிகனின் அளப்பரிய திறமையை காண வேண்டுமா?
அவரைக் கடவுளாக பார்க்காதே!

நடிகையின் அளப்பரிய திறமையைக் காண வேண்டுமா?
அவரை போகப் பொருளாக பார்க்காதே!

நல்ல திரைப்படம் என்பது
ரசிகனின் கவலையை மறக்கச் செய்வது அல்ல,
ரசிகனின் கவலையை உடைக்கச் செய்வது.

திரைப்படத்திற்கு அடிமையாகி கிடக்காதே!
உனக்கான அரசியலை பேசும்
உனது அடியாளாக திரைப்படத்தை மாற்று.



சே.பிரவீனா,
மன்னார்குடி

# மது ஒழிப்பு



ஜெயசீலன்
மன்னார்குடி

மது ஒழிப்பு எனும் சொல் மன்னர் காலத்திலேயே தோன்றிய சொல். ஆங்கிலேயர்கள் காலத்தில் அதிகபட்ச மகிழ்ச்சியை அனுபவித்தவர்கள் மது பிரியர்கள் தான். ஏனென்றால் மது அருந்தவோ, விற்கவோ எந்த ஒரு தடையும் அப்போதிலிருந்தே இல்லை. பின்னர் நாம் அடிமைத்தனத்தில் இருந்து மீண்டும், நாம் இன்னும் இந்த மதுவின் அடிமையில் இருந்து மீளவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

அதிலும் நம் தமிழ்நாட்டில் மூளைமுடுக்கெல்லாம் சிறியவர், பெரியவர், பெண்கள் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைத்து இடத்திலும் பரவிக் கிடக்கிறது இந்த மது.

மதுவிற்காக எவ்வளவு மோசமான நிலைக்கும் தள்ளபடுகிறார்கள். ‘‘குடிக்க பணம் தர மறுத்ததால் பெற்ற தாயையே கொலை செய்த மகன்‘‘ என்று செய்தித்தாளில் படிக்கும் பொழுது நாம் இந்த தமிழ்நாட்டில் தான் வாழ்கின்றோமா என்ற எண்ணம் அவ்வப்போது என் மனதுக்கு எழுகிறது. பத்து மாதம் சுமந்து ஈன்றெடுத்து மாரிலும் தோளிலும் போட்டு வளர்த்து, வெயில் பட்டால் தன் பிள்ளை கருத்து போய் விடுவானோ என்று பொத்தி பொத்தி வளர்த்த தாயையே எட்டி உதைத்து கொலை செய்யும் அளவிற்கு மதுவால் அவன் மாற்றப்படுகிறான் என்றால் நம் தமிழ்நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் ஆராய வேண்டிய நிலையில் உள்ளோம்.

3 வயது குழந்தைக்கு தன் தாய் மாமனே மதுவை ஊற்றிக் கொடுத்து அழகுப் பார்க்கும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆறு வயது பெண் குழந்தை என்று கூட பார்க்காமல் மதுவை அருந்திவிட்டு அவன் உடல் பசியால் அந்த பிஞ்சு குழந்தையை வன்மம் செய்ய துணியும் அளவிற்கு இந்த மது அவனுக்கு தைரியத்தை கொடுக்கிறது.

பெரும்பாலும் மது பிரியர்கள் பயன்படுத்தும் வார்த்தை ‘‘போதையில் நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியவில்லை‘‘ என்பது தான். அந்த அளவிற்கு இந்த மதுவிற்கு அவன் அடிமையாகி விடுகிறான்.

இவை தான் இப்படி என்றால், இந்த மதுவை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும் அரசியல்வாதிகளும் அவர்களின் பொதுக் கூட்டதிற்கு மதுவை வைத்துக் கொண்டு தான் மக்களை அழைக்கின்றனர். அரசியல்வாதிகள் தான் மது ஆலையையும் நடத்துகின்றனர். மதுவை விற்கும் வருமானத்தைக் கொண்டு தான் நிதி நெருக்கடியை சமாளிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தமிழக பெண்களின் நித்திரையையும் அவர்களின் கனவையும் தகர்தெரிந்துக் கொண்டு இருக்கிறது இந்த தமிழக அரசும்

அதன் ஆட்சியாளர்களும்.

மது ஒழிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு தன் உயிரையே விட்டாரே தோழர். சசிபெருமாள். அவரின் இழப்பு பேரிழப்பு. எப்போது தான் அவர் கண்ட கனவு பலிக்குமோ தெரியவில்லை. இன்னும் மது ஒழிக்கப்பட வேண்டும் என்று தள்ளாத வயதிலும் நடை பயணம் மேற்கொள்கிறாரே குமரி ஆனந்தன். அவரோடு நாமும் கைக் கோர்க்க வேண்டும். அரசின் அடக்குமுறையைத் தாண்டியும் தனியொரு பெண்ணாக போராடும் தோழி. நந்தினி. அவரின் போராட்டக் குணத்தைக் கண்டு நான் வியக்கிறேன்.

மதுவை ஒழிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட்ட களத்தில் களம் இறங்க வேண்டும்.

‘‘வாழ்க்கை போராட்டக்களமானது. போராட்டக்களம் இன்பகரமானது’’ என்று காரல் மார்க்ஸ் கூறியுள்ளார். போராட்டத்தின் வாயிலாக மட்டுமே நிரந்தர தீர்வை காண முடியும் என்ற நிலையில் தான் நம் தமிழகம் உள்ளது.

மதுவை ஒழிப்பதற்காக ‘‘மதுக்கடைக்கு எதிராக போராடுவதை விட்டுவிட்டு அனைவரும் மது ஆலைகளுக்கு எதிராக போராடுவோம்.’’

அப்படி போராடினால் மட்டுமே மது ஒழிப்பு சாத்தியம். மதுவால் மதியிழந்து கிடக்கும் இந்த தமிழகத்தை நாம் ஒன்றிணைந்து மாற்றியமைக்க வேண்டும். மது இல்லாத தமிழகமாக மாற வேண்டும் என்பதே மக்களின் கனவு.

கனவு காண்போம். நிச்சயம் ஒரு நாள் நடக்கும் என்று.

- ஜெயசீலன்

# கல்வியே சிறந்தது

இன்றைய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது நவீன உலகில் மிகவும் அரிதாக காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.

கல்வியின் சிறப்பு பற்றி கூறும்போது கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான்.
இதற்கு காரணம் அவன் கற்ற கல்வியே.

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்க ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும். இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

‘‘யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாதவாறு’’ என்று குறிப்பிடுகிறார்.

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்கு கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

‘‘கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக’’

என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

ஜவகர்
மன்னை



# யாரறிவாரோ...

கடுகளவேனும் அறியேன் உன் படைப்பின் காரணத்தை....

ஏன் படைத்தேன் என்று படைத்தவன் அறியமுன்னே..!
ஏன் விதைத்தேன் என்னுள் உன்னை..?

வலிகளை மறக்கவும் வாழ்க்கையை ரசிக்கவும்
என்னோடு நீயிருந்தாய்....

கோபத்தின் சாயலிலும் உன்னால் நான் வெளிப்பட்டேன்...

நீ என்னருகில் இருந்த நேரத்தைவிட என்னுள் இருந்த நேரமே மிகுதி...

நான் உன்னை ரசித்ததை விட ருசித்ததே அதிகம்...

அதில் பல மகிழ்வுடன் மனநிம்மதியும் பெற்றேன் நான்...!

நான் உன்னுடையவனாக மாறியதன் காரணம்
இந்த நொடிவரை அறிந்ததில்லை என் மனம்...

விடையென்னவோ உன் மீதான எனது தீராக்காதல்...!

ஒருவரும் விரும்பவில்லை நான் உன்னுடன் தனித்திருந்ததை....
யாருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை ...!
நீ தனி உயிர் அல்ல

என்னுள்ளே ஒருயிராய் இருந்து என்னுயிர் பறிக்கும் ‘‘மதுபானம்‘‘ என்னும்
பெயர்பெறுவாய் என்று...!!!

---

**க. உதயநிதி**
இளங்கலை ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு,
மன்னை இராசகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரி.

# விதைத்தவனின் விசும்பல்

காத்திருந்தேன் கனவுகளோடு
பெருமைக் கொண்டேன்
வாழ்வளிக்கும் வயோதிகன் - நானென்று

ஆனால் போராடுவதே
என் தொடர்கதையானது.

வானம் பார்த்துக் காத்திருந்தேன் -அன்று
வானுயர கட்டிடமே தெரிகிறது-இன்று

விளைநிலம் விலைநிலமாகிய போதும்
கடப்பாறை கையில் பிடித்த போதும்
கலப்பை பிடித்த நினைவுகள்-நெஞ்சினில்.

விளைநிலம் வீட்டுக்கட்டிடமான போது
விவசாயமும் அழிந்துப் போனது

முல்லைப் பெரியாறாய் முட்டுக் கட்டையிட்டும்
காவிரியாய் வந்து கைவிட்டும் விட்டாயே

விதையை விளைவிக்க முடியாமல் வெடித்து நிற்கின்றது - என் நிலம்
எங்களின் தற்கொலையைகங கூட
விபத்தாய் பார்க்கின்றனர் - பலரும்.
படத்திற்கு கிடைக்கும் முக்கியத்துவம்
என் விவசாயத்திற்குக் கிடைக்கவில்லை - என
நினைக்கும் போது தற்கொலையே
சரியானதாகிவிடுகிறது...

விவசாயியாய் பிறந்ததுதான் என் தவறோ?

விவசாயம் அழிகிறதெனில் விவசாயியும் அழிகிறான்.

---

- இலக்கியா இளவரசன்

# தாய்மொழியை காப்போம்



விக்னேசு மன்னை

நாம் ஆயிரம் தான் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நம்மால் முடிந்த அளவு பெரும்பாலும் தமிழில் பேசி, தமிழில் தட்டச்சு செய்து தமிழே உயிர் மூச்சாக கருதி சிலர் வாழ்ந்தாலும், பெரும்பாலான படித்த தமிழ் இளைய தலைமுறைகள் (முப்பாலரும்) இன்று தினந்தோறும் தாங்கள் பேசும் தமிழில் இடையிடையே ஜி என்ற இந்த வார்த்தையை நிறைய பேர் கேட்டு இருப்பீர்கள். அது தமிழ் மொழி சொல் அல்ல. கிந்தி மொழி சொல்.

வாங்க ஜி, சொல்லுங்க ஜி, நில்லுங்க ஜி, ஜி டிபன் சாப்டீங்களா ஜி? இது மாதிரி நிறைய பேர் சொல்லி கேட்டும் இன்றைய சூழலில் தான் நாம் இருக்கிறோம்.

அது என்ன ஜி? ஜி என்றால் தமிழர் வழக்கம் இல்லையே. பிறகு எப்போது வந்தது? இது நமக்கு முந்தைய தலைமுறையினரின் அறியாமையிலும் தமிழர் நாட்டில் வடக்கு, மேற்கு, கிழக்கு, மத்திய இந்திய மக்களின் ஆதிக்கம் தான் முக்கிய காரணம். ஒருவரை கிந்தி மொழியில் மரியாதை நிமித்தமாக அழைப்பது நாம் நம்ம ஊரில் பயன்படுத்தும் வாங்க, போங்க என்ற சொல்லில் இருக்கும் ''ங்க'' தான் இந்த ஜி.

நம்மவர்கள் கலப்படம் செய்வதிலும், ஒரு தெளிவு இல்லாமல் தான் செய்வார்கள்.

தமிழில் வாங்க என்று மரியாதையோடு கூப்பிட்டு விட்டு ஜி என்ற வேற்று மொழி மரியாதை சொல்லையும் இணைத்து கூறி மொழிக்கு கலப்படம் ஏற்படுத்துகின்றனர்.

இந்த கிந்தி மொழி நம் மொழியினை பாதித்து விடக் கூடாது என்பதற்காக எத்தனை பேர் தங்கள் உயிரை தியாகம் செய்து உள்ளார்கள் என்பதை அறியாதவர்களே இப்படி பேசுகிறார்கள்.

இந்த மாதிரி வேற்று மொழி கலந்து தமிழ் பேசி விதைக்கப்பட்ட அந்த அந்த மொழி போர் தியாகிகள் உயிரை உதாசீனப்படுத்துகிறார்கள். அது தான் வேதனையிலும் வேதனை. வேறு எந்த மொழியில் இந்த மாதிரி இரண்டு மொழியை சேர்த்து ஒருவருக்கு மரியாதை கொடுக்கும் பழக்கம் இல்லை.

உதாரணத்திற்கு தெலுங்கு மொழியை எடுத்துகொள்ளுங்கள் அவர்கள் வாங்க, போங்க என்பதை ரண்டி, வெள்ளண்டி என்று கூறுவார்கள். வா, போ என்பதை ரா, வெள்ளு என்று கூறுவார்கள்.

அவர்கள் நம்மை போன்று வாங்க ஜி, போங்க ஜி என்பதை ரண்டி ஜி, வெள்ளண்டி ஜி என்று கூறுவதில்லை.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள் அனைத்து மொழிகளுக்கும் பழமையான மொழி, மூல மொழி தமிழ்தான். நம் மொழியில் பிற மொழியை கலக்க தேவையில்லை. தமிழன் என்றுமே தமிழன் தான். நாம் என்ன தான் தலைகீழாக நின்றாலும் அவர்களாக மாற முடியாது. மாறவும் தேவைகள் இல்லை.

தனி மனித மாற்றமே சமூக மாற்றத்திற்கான தொடக்கம். நாம் உணர்ந்து ஜி என்ற சொல்லை தவிர்த்து நம் தமிழர் உறவு முறையில் அழைப்போம். தாய் மொழியான தமிழைக் காப்போம்.

ஆட்டம் தொடரும் ...


**- விக்னேசு மன்னை**



**மு. அன்புதங்கம்**
6 ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலை பள்ளி
துளசேந்திரபுரம்

மன்னார்குடி
## ரா. ராஜேஷ்

எழுதும் புத்தம் புதிய தொடர்





# செண்பக வனம்

முதல் அத்தியாயம்

# செண்பக வனம்

## முதல் அத்தியாயம்

அண்ட வெளியில் சின்னஞ்சிறு புள்ளியே பூலோகம், பூலோகத்தின் சிறு புள்ளியே இன்றைய தமிழகம், ஆனால் ஆயிரம் ஆண்டிற்கு முன்னர் பூலோகம் முழுவதும் வாணிபம் செய்து, மூன்றில் ஒரு பங்கை ஆட்சி செய்தவன் தமிழன், அதற்கு காரணம் ஒரு தந்தை, மகனின் ஆட்சி காலம், அதுவே தமிழகத்தின் பொற்காலம்.

தஞ்சையிலிருந்து கிழக்கே சில காத தூரத்தில் தாய் காவேரியின் கிளை நதியின் தென்கரையில் செண்பக மரம் சூழ்ந்த ஒரு ஊர் செண்பக வனம் என்றழைக்கப்பட்டது, தற்போதைய மன்னார்குடி தான் அன்றைய செண்பக வனம்.

பொன்னாடை போர்த்தியது போல பழுத்து தலைவணங்கிய வயல்வெளிகளை கடந்து செண்பக வனத்தில் நுழைந்தது அந்த ஆற்றங்கரை வழி, பின்பனி காலத்தின் முழுநிலவு மறைந்து மெல்ல கண்விழிக்க காத்திருந்தது சூரியன், வெண்மேகம் வீதியிலிறங்கி தவழ்வது போல மூடியிருந்த பனிமூட்டத்தை கிழித்துக்கொண்டு வந்தது அந்த இரண்டு குதிரைகள், உடைவாள் தரித்த அதிலிருந்த வீரர்கள் பனிமூடிய அந்த பாதையை பரபரப்பாய் பார்த்த வண்ணம் போனார்கள்

அவர்களின் சற்று பின்னே அதே வேகத்தில் வெள்ளைபுரவியில் விண்ணுலக தேவன் போல ஒருவர் வர அவரின் இடமும் வலமும் அவரை ஒட்டியவாறு மேலும் இரண்டு குதிரை வீரர்கள் பயணித்தனர், பின்னால் சுமார் இருபது அடி தொலைவில் மேலும் சில குதிரைகள் அவரை பின் தொடர்ந்தன, அது பார்ப்பதற்கு சிறிய குதிரை படை போல இருந்தது

‘‘சர்க்’’ என்ற ஒலியுடன் ஒரு அம்பு வெண்குதிரை தேவரின் காதருகே காற்றை கிழித்து சென்று உடன் வந்த வீரனின் கழுத்தில் பாய்ந்து அம்பின் முனை மறுபக்கம் வெளியே வந்தது அதன் வழியே இரத்தம் பீறிட்டது, அடுத்த நொடி அவன் தலை தொங்கி தரையில் வீழ்ந்தான்

உடன் வந்த வீரர்கள் அம்பெய்தியவனை திருப்பி தாக்க, அம்பு வந்த திசையை நோக்கிய அனைவரும் திகைத்து நின்றார்கள், அங்கே வில்லாளியின் இரத்தம் வழியும் பிடரியில் கால் வைத்து கொண்டு நின்றது ஒரு கரும்புலி. அதன் வாயிலிருந்து வழியும்

இரத்தம் அம்பெய்த வில்லாளியுனுடையது என்பதை சொல்லாமல் சொல்லியது

முதல் நொடி திகைத்து மறுநொடி சுதாரித்த குதிரை வீரர்கள் வெண்குதிரைக்கு அரைவட்டமாய் அரண் அமைத்து மற்றவர் புலியை நோக்கி முன்னேற அடுத்த அரை நொடியில் மறுபுறமிருந்து சீறிய அம்பு எதிரிலிருந்த மரத்தில் குத்தி ‘டங்ங்’ என்ற ஒலி எழுப்பியது

திகைப்பு மாறாமல் திரும்பி பார்த்த கண்கள் ஒரு விசித்திர நிகழ்வைக் கண்டன.

இளங்கருப்பு நிற இளைஞன் ஒருவன் அம்பெய்த வில்லாளியின் பின் கழுத்தில் தன் முழங்காலால் தரையில் அழுத்திக் கொண்டு அம்பெய்த வில்லாளியின் வலக்கையை தனது இடக்கையில் இருந்த தேக்கு களியால் அடித்தே பிய்த்து எடுத்தான், பிய்த்த கையிலிருந்து பீறிட்ட இரத்தம் நாலாபுறமும் வீசியடித்தது.

புலியின் பக்கமிருந்த அந்த அரைவட்ட அரண் இப்போது முழுவட்ட அரணானது வெண்குதிரைக்கு.

’நில் அங்கே’ என்று உரக்க கத்திய குதிரைவீரன் இளைஞனை நோக்கி நகர முயல்கையில் அதுவரை தன் மூக்கிலும் கால் விரல்களிலும் படிந்திருந்த இரத்தத்தை சுவைத்து சுத்தப்படுத்தி கொண்டிருந்த அந்த கரும்புலி இரண்டே பாய்ச்சலில் இளைஞனின் பின்னால் வந்தது, குதிரை வீரனை கொலை வெறியுடன் நோக்கியது.

இளைஞனோ ஒற்றை பார்வையில் புலியை அடக்கி கையில் இருந்த களியை இடுப்புக் கச்சையில் சொருகிக் கொண்டு தனது கைகள் இரண்டையும் தலைக்கு மேல் தூக்கி கொண்டு புன்னகைத்தான்.

சில நொடிகளில் நடந்து முடிந்த அந்த நிகழ்வை பதட்டமே இல்லாமல் பார்த்து கொண்டிருந்த வெண்குதிரை தேவர் திருமேனி என்று அழைக்க முன்னேறிய குதிரை வீரன் அதே இடத்தில் நின்றான்.

அவன் பக்கமாய் தன் குதிரையை அவர் திரும்ப அரண் சற்றே விலகி வழிவிட்டது, பின்னால் இருந்த வீரனிடம் அம்படிப்பட்டவனை பரிசோதிக்க சொல்லிவிட்டு இளைஞனை நோக்கி முன்னேறி அவனை கருணையோடு பார்த்து யாரப்பா நீ என்று கேட்டார்.

நான் மாணிக்கம் இவ்வூரான், இவ்வூர் மறவர் தலைவன் சிவநேசனின் மகன், இவன் எனது நண்பன் கரியன் என்று கரும்புலியை தடவ அது அவனை உரசிக்கொண்டு சுற்றி வந்தது.

என்ன கரும்புலி நண்பனா? விசித்திரம் தான்! என சிரித்து பேசிக்கொண்டார்கள் வீரர்கள், இறந்த வில்லாளிகளை சுட்டிக்காட்டி இவர்கள் யார் என்று திருமேனி கேட்டான் மாணிக்கத்திடம்.

எனக்கு தெரியாது, அதோ அங்கே என் தாய் தந்தையின் நெடுகல் உள்ளது தினமும் காலையில் மலர் வைத்தும் மாலையில் விளக்கேற்றியும் வணங்கி வருகிறேன்.

இன்று காலையில் வழக்கம் போல நானும் கரியனும் பூப்பறிக்க வந்தோம்

அத்துணைக் காலைப் பொழுதில் குதிரைக் காலடி சத்தம் கேட்டதால் அங்கே பார்த்தோம், நான்கு குதிரைகள் வந்து நின்றது, தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள், இருவர் பிரிந்து சென்றார்கள், இருவர் இங்கேயே நின்றார்கள், நின்றவர்கள் சற்று நேரத்தில் தான் வந்த குதிரையை மறைத்தார்கள், தாங்களும் மறைந்து கொண்டார்கள்.

எங்களுக்கு ஏதோ தவறு நடப்பதாய் உணர்ந்தோம், எனவே நாங்கள் ஆளுக்கு ஒருவராய் அவர்களறியாது அவர்கள் பின் மறைந்தோம்.

அதன் பின் நடந்தவை உங்களுக்கே தெரியும் என்றான், அம்படிப்பட்ட வீரனுக்கு உயிர் இருப்பதாய் பரிசோதித்த வீரன் கூற மற்றவர்கள் அவனை காப்பாற்ற பதட்டப்பட்டார்கள்.

மாணிக்கமோ பதட்டப்படாதீர்கள் அவர் இனி பிழைக்க மாட்டார், அது மிக கொடிய விஷம் தடவப்பட்ட அம்பு. அதற்கு மாற்று மருந்து இல்லை என்றான்.

அதெப்படி உனக்கு தெரியும் என மற்றவன் கேட்க என் தாய் விஷகடிக்கும் வெட்டுகாயத்திருக்கும் மருத்துவம் பார்ப்பதில் கைத் தேர்ந்தவர், அவருக்கு தெரிந்த எல்லாவற்றையும் எனக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார் என்றான்.

விஷம் உலராமல் இருக்க அதனை தோலால் ஆன உறையில் வைத்து இருக்கிறார்கள், இந்த விஷத்தை நுகர்ந்தால் கூட பக்கவிளைவுகள் ஏற்படுவது உறுதி, அதனால் தான் இத்தனை பாதுகாப்புடன் செயல்படுகிறார்கள் என்று கூறியவாறே வில்லாளியின் அம்பு பையை சுட்டிக்காட்டினான், அவன் கூறுவது சரி என்பது போலவே அந்த அம்புப் பை இருந்தது.

ஒரு செவ்வக தோளில் ஒவ்வொரு அம்பிற்கும் தனித்தனியே அறையிலிருந்து வெறும் ஆறு அம்புகளே அதில் வைக்க முடியும், ஆனால் அதிலிருந்து நான்கு அம்புகள் மட்டுமே, மீதி இரண்டு அம்புகள் மாயமாகியிருந்தன, ஒன்று மரக்கிளையில் உள்ளது மற்றொன்று எங்கே என சிந்தித்தவாறே அதனை கையகப்படுத்த திருமேனி

குதிரையிலிருந்து இறங்கினான்.

கையிழந்து மயங்கிய வில்லாளி மயக்கம் தெளிந்து கண்விழித்தான், அங்குள்ள சூழ்நிலை அவனுக்கு மிக எளிதில் புரிந்தது, அவன் பதட்டத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தான், தலையின் கீழே ஏதோ ஒன்றைக் கண்டு முகமலர்ந்தான், பலமாக தரையில் தலையை முட்டிக் கொண்டான் அதே நிலையில் கிடந்தான், அதைக்கண்ட திருமேனி விரைந்து சென்று தலையைத் தூக்கினான், அந்த காணாமல் போன இரண்டாவது அம்பு அவன் தலையில் மிக ஆழமாக பதிந்திருந்தது, சுவாசம் அடங்கியிருந்தது...

மணம் மயக்கும் மாலைப்பொழுது கழிந்து பனிபொழியும் முன் இரவு தொடங்க மதிமயக்கும் செண்பகப்பூ மணம் கமழ்ந்தது அந்த வனமெங்குமே...

விண்மீன்கள் பூத்திருந்த விரிந்த வானத்தை வெறித்து பார்த்தவாறு மரக்கிளையில் படுத்து இருந்தான் மாணிக்கம், அவன் எண்ணமெல்லாம் நேற்றைய காலை நிகழ்ந்த சம்பவத்திலே நிலைத்திருந்தது.

வில்லாளி இறந்ததும் அவன் யாரென்று அறிய முடியாமல் போன ஏமாற்றத்துடன் திரும்பிய தேவரை பார்த்த மாணிக்கம் எனக்கு தங்களிடம் இரண்டு வரம் வேண்டும் என்றான், அவரோ என்ன என்பதைப் போல புருவம் சுருக்கி அவனை உற்றுப் பார்த்தார்.

இவ்வழி இன்னும் ஒரு காத தூரத்திற்கு இதே போல மரங்களையும் மறைவிடங்களையும் கொண்டது, வந்த நால்வரில் இருவரின் நிலை அறியவில்லை, எனவே என்னையும் கரியனையும் இந்த காடு முடியும் வரை பரிசோதிக்க அனுமதிக்க வேண்டும்.

மற்றொன்று தங்களை ஐயன் என்று அழைக்க அனுமதி வேண்டும் ஏன் என்று பின்னால் இருந்த வீரன் கேட்க,

தெரியவில்லை என் மனம் சொல்கிறது அப்படி அழைக்க, அதை அனுமதிப்பது உங்களின் விருப்பம் என்று தேவரைப் பார்த்தான்.

வீரன் உன் முதல் விண்ணப்பம் ஏற்கப்பட்டது, இரண்டாவது பரிசீலிக்கப்படும் என்ற தேவர் திருமேனியை பார்த்தார்.

கையகபடுத்திய ஆயுதங்களுடன் வேகமாய் குதிரையேறி அதன் தொடையை தட்டினான்.

இதைப்பார்த்த கரியனும் மாணிக்கமும் ஒருவரை ஒருவர் நோக்கினர், அடுத்த கணம் காற்றில் பறப்பது போல மரம்விட்டு மரம்தாவி குறுக்கும் நெடுக்குமாய் துலாவி தேடி

காட்டின் கரை தொட்டனர், ஒரு சில வினாடிகளில் குதிரைப்படை அவர்களை கடந்தது.

தேவர் திரும்பிப் பார்த்து புன்னகைத்தார், விரைவில் அழைப்பு வரும், தயாராயிரு என்று உரக்க குரல் கேட்டது, குரல் யாருடையது என அனுமானிக்க முடியவில்லையே என்று சலிப்புடன் சுயநினைவடைந்த மாணிக்கத்தின் கண்கள் கரியனை தேடியது.

சலசலத்த புதரிலிருந்து வாயில் ஒரு சிறுநரியுடன் வெளியே வந்த கரியன் அதனை கீழே போட்டு முன்காலால் தட்டி எழுப்பினான், இறந்தது போல நடித்த நரியும் விருட்டென்று எழுந்து ஓடியது, அதனை பாய்ந்து பிடிப்பது போல பாவனைக் காட்டி கரியன் விளையாடிக் கொண்டிருந்தான்.

## பயணம் தொடரும் ...

---

# உணவை பற்றி உணர்தல்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

1) எளிதில் கிடைக்க கூடிய உணவு
2) எளிதில் செரிக்க கூடிய உணவு
3) காலத்திற்கேற்ற உணவு
4) வயதிற்கேற்ற உணவு
5) உழைப்பிற்கேற்ற உணவு

எளிதில் கிடைக்கும் உணவு:

நாம் வாழும் இடத்தில அருகாமையில் இயற்கை கொடுக்கும் உணவுகளை உண்ண வேண்டும். நாங்கள் மகாபலிபுரம் சென்றபோது எங்களிடம் மருத்துவம் செய்துகொள்ள வந்தவர்களில் 90% நபருக்கு உடம்பில் உப்பு அதிகமாக இருந்தது. அதற்க்கு காரணம் அங்கே கடலின் உப்பு காற்று. அந்த உப்பு காற்றினால் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பங்களாக்களில் சன்னல்கள் விரைவில் துருப்பிடித்து விடுகிறது. மனித உடலில் உப்பை குறைக்க இயற்கை அங்கே வழி செய்திருக்கிறது.

அந்த ஏறிய முழுவதும் தர்பூசணி தான் அதிகமாக விளைகிறது. ஆனால் அங்குள்ளவர்கள் அதை சாப்பிடுவதில்லை. தர்பூசணியை சாப்பிடுங்கள். உங்களுக்கு மருந்தே அது தான் என்று சொன்னதை கேட்டு சாப்பிட்டவர்கள் அனைவருடைய உடலிலும் உப்பு வெளியேறியது. இது நாங்கள் உணர்ந்த உண்மை. நமக்கு

அருகாமையில் நமக்காக இயற்கை எதை அர்ப்பனித்திருக்கிறது என்று தேடுங்களேன்.

எளிதில் செரிக்கும் உணவு:
இது ஒவ்வொருவருக்கும் வேறுபடும். எந்த உணவு எடுத்த பிறகு வயிறு சீரணிக்க சிரமபடுகிறதோ, நேரம் கூடுதலாக எடுதுகொல்கிரதோ அதை தவிர்ப்பது நல்லது.

காலத்திற்கேற்ற உணவு:
ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றவாறு நம் உடலுக்கு பொருந்த கூடிய உணவுகளை இயற்கை நமக்கு கொடுத்துகொண்டே இருக்கிறது. வறட்சி காலத்தில் கோடையில் நுங்கு, இளநீர், தர்பூசணி, வெள்ளரி பிஞ்சு, சுரைக்காய், சௌ சௌ, பூசணிக்காய், இப்படி நீர்ச்சத்துள்ள உணவை நமக்கு அளிக்கிறது. இப்படி கொடுப்பது மட்டுமல்ல, எப்படி பாதுகாக்கிறது என்பதையும் பார்ப்போம்.

ஒரு சிறிய கல்லை தூக்கி தண்ணீரில் போட்டால் மூழ்கி விடும். ஆனால் யாழ்பாணத்தில் 1 குலை தேங்காய் தண்ணீரில்(கடலில்) விழுந்தால் கோடியக்கரைக்கு வந்து சேருகிறது. அப்படி பாதுகாத்து கொடுக்கும் இயற்கையின் அன்பையும் கருணையையும் உணர்ந்தால் நாம் காலத்திற்கேற்ற உணவை உண்ண வேண்டுமல்லவா?

வயதிற்கேற்ற உணவு:
பிறந்த குழந்தை திரவ உணவிலிருந்து திட உணவுக்கு வருவது போல வயதாக வயதாக மீண்டும் திரவ உணவிற்கு செல்ல வேண்டும்.

உழைப்பிற்கேற்ற உணவு:
சிந்தனைகேற்ற உணவு, செயல்படுவதர்கேற்ற உணவு எடுக்க வேண்டும்.(உம்) பழகல் உணவாக எடுக்க வேண்டும் என்றால் சிந்தனைக்கு சாறுள்ள பழங்களும், செயல்படுவதற்கு சதையுள்ள பழகலும் எடுப்பது நல்லது.

நல்ல பாம்பு செயல்படுவது நின்றுவிட்டால் உணவை நிறுத்திகொள்ளும். உணவை மறுத்து உண்ணாநோன்பு இருந்து உயிர்விடுவதால் அதற்க்கு பெயர் நல்ல பாம்பு. சக்தி இல்லாத காலத்தை அது விரும்பவில்லை.

சக்தி இல்லாத காலத்தை (ஆயுளை) நாமும் விரும்பாமல் உழைப்பிற்கேற்ற உணவை எடுத்துக்கொள்வோமா?

**- ராணிச்சந்திரன்**

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்